Branch Library

விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆனி 22 ஷவ்வா 27 இதழ் 145

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (6—7—86)

## கடலில் 10 நாட்கள் தத்தளித்த இந்திய மீனவர் ஐவர் புங்குடுதீவு கரையை சேர்ந்தனர்

வேலணை, சனி

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிப்பதற்காக ஸ்ரீ ஆஞ்சநேயர் என்ற படகில் புறப்பட்டு கடந்த பத்து நாட்களாக இயந்திர கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த ஐந்து மீனவர்களும் இன்று புங்குடுதீவு கரையை வந்தடைந்தார்கள்.

இவர்களை தேடி இருபடகுகளில்வந்த ஒன்பது பேருமே நடுக்கடலில் கடற்படைதாக்குதலுக்கு பலியானர்கள் மற்றொருவர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்பது தெரிந்ததே இராமநாதபுரம் தணைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆ. நாகமுத்து [24 வயது], ஜனுப் பருதீன் [20 வயது], அந்தோனி (45 வயது], மு. ஆறுமுகம் [60 வயது] உட்பட ஐவரும்மே புங்குடுதீவு கரையை வந்து சேர்ந்தவராவர். [ஐ]

# பலாலி முகாம்பகுதியிலிருந்து வெளியேறிய 125 குடும்பங்கள் மீண்டும் குடியேற பிரிகேடியர் இணக்கம்

## கடலில் மீன் பிடிப்பது குறித்தும் பரிசீலனை

மாவிட்டபுரம் சனி,

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக வெளியேற்றப்பட்ட 125 குடும்பங்களை மீண்டும் அப்பகுதியில் குடியேறி விவசாயம் செய்ய யாழ். இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா நேற்று அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து மக்களை சந்தித்தபோது இணக்கம் தெரிவித்தார். அப்போது கடலில் ஐந்து மைல் தூரத்துக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதி அளிக்கும்படி விடுத்த கோரிக்கை பற்றி மேலிடத்துடன் தொடர்பு கொண்டு அடுத்தவாரம் பதிலளிப்பதாகவும் உறுதியளித்தார்.

பலாலி இராணுவமுகாம், விமான நிலைய விஸ்தரிப்பு காரணமாக வெளியேறிய 125 குடும்பங்கள் மீண்டும் குடியேறி விவசாயம்செய்ய விசேட அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மேற்படி விஸ்தரிப்பால் இடம் பெயர்ந்த மக்களின் பிரச்னைகள் குறித்து ஆராய பிரிகேடியர் ரூ சிங்கா மேற்படி பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அச்சமயம் பாதிக்கப்பட்ட மக்களும், மீனவர்களும் கலந்து கொண்டனர்.

அப்போது மயிலிட்டிகரை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு வி. இரத்தினராசா கீழ்க்காணும் கோரிக்கைகளை மக்கள் சார்பாக சமர்ப்பித்தார்.

"இராணுவ முகாமுக்கு வட

(12ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான உதவியை நிறுத்துமாறு கோரிக்கை

பொண், ஜூலை 5

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் இலங்கைக்கு மேற்கு ஜெர்மனியின் அபிவிருத்தி உதவியை நிறுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழக முதலமைச்சரை போராளிகள் சந்தித்தனர்

சென்னை, ஜூலை 5

இலங்கைத் தமிழ் போராளிகள் குழுக்களின் ஐந்து தலைவர்கள் தமிழக முதல்வர் திரு. எம் ஜி. ராமச்சந்திரனை அவரது இல்லத்தில் சந்தித்து இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு தெரிவித்துள்ள புதியயோசனைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்கள்.

சுமார் அரை மணி நேரமாக நடைபெற்ற இச்சந்திப்பின்போது முதலமைச்சருக்கு உதவியாக தமிழ்நாடு மின்துறை அமைச்சர் எஸ் ராமச்சந்திரன் கலந்துகொண்டார்.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுடன் நடைபெறும் பேச்சுகள் பூர்த்தியாகும்வரை இலங்கையின் புதிய யோசனைகள் குறித்து கருத்து எதுவும் வெளியிடமுடியாது

(12ம் பக்கம் பார்க்க)

## உருக்குலைந்த நிலையில் 6 சடலங்கள் கரை ஒதுங்கின

வேலணை, சனி

வேலணை தெற்கு கடற்கரையோரத்தில் நான்கு சடலங்களும் வேலணை வெள்ளைக் கடற்கரை பகுதியில் இரண்டு சடலங்களும் நேற்று காலை உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கயிருந்தன.

## மீனவர் பலி

### இராமேஸ்வரத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 9பேர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டு பலியானதற்கு ஆட்சேபம் தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் செல்லவில்லை.

இதேவேளை இராமேஸ்வரம் மீனவர் பகுதிகளில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ஐ)

## 'பலியானோர் அப்பாவிகளே'

லண்டன் ஜூலை 5

பெரும்பாலும் சிங்களவர்களை கொண்டுள்ள இலங்கை இராணுவத்திற்கு பிரிட்டிஷ் விசேஷ படை நிபுணர்கள் முனைப்பாகப் பயிற்சி அளித்து வருவதாக வாஷிங்டன் பத்திரிகை செய்திகளை மேற்கோள் காட்டி பி.ரி ஐ. செய்தி ஒன்று கூறுகிறது.

அத்துடன் இலங்கை இனப் போராட்டத்தில் கொல்லப்பட்டோரில் பெரும்பாலானோர் அப்பாவிப் பொதுமக்களென்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையை மேற்கோள் காட்டி இந்த செய்திமேலும் தெரிவிக்கிறது. [து]

## பி பி ஸியில்

## இலங்கை ஸ்தானிகர் பேட்டி: வி. என். நவம் கண்டனம்

புதுடில்லி, ஜூன் 5

"தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட சில யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் சில உடன்பாடுகளை ஒட்டியிருந்தது ஆனால் தமிழகம் திரும்பியதும் தமிழ் தீவிரவாதிகளின் நெருக்கடி காரணமாக அந்த உடன்பாடுகளிலிருந்தும் த. வி. கூ. விலகிக் கொண்டது" என்று இலங்கை உயர் ஸ்தானிகர் பி பி. ஸி. பேட்டியொன்றில் வெளியிட்ட கருத்து தொடர்பாக த. வி கூ. சிரேஷ்ட உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

திரு. வி. என். நவரத்தினம், இப்பேட்டி குறித்து பி.பி ஸி. செய்தி நிறுவனத்தினருக்கு எழுதியுள்ள கடிமொன்றில், இலங்கை உயர் ஸ்தானிகரின் கருத்து உண்மைக்கு மாறானது எனக்குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது தமிழர்விடுதலைக் கூட்டணிக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர் என்ற முறையில் உயர் ஸ்தானிகரின் கருத்துத் தவறானது என்பதைக்குறிப்பிட விரும்புகிறேன்.

ஜனாதிபதி கூட்டிய அனைத்துக்கட்சி மகாநாட்டின் விபரங்கள் குறித்து நான் தனிப்

(11ம் பக்கம் பார்க்க)



கோப்பாயில் ஹெலியின் தாக்குதலுக்கு பலியான யாழ். இந்துக்கல்லூரி மாணவனும், 'ரெசோ' வாரியச் செயலாளருமான பொன். நகுலபாஸ்கரனின் இறுதி ஊர்வலத்தையும் அவரது பூதவுடல் சாவகச்சேரி நகர மயானத்தில் அக்கினியுடன் சங்கமமாவதையும், அச்சமயம் தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) உறுப்பினர்கள் இறுதி மரியாதை செலுத்துவதையும் படத்தில் காணலாம்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பற்றிக் [Batick] துணிவகைகள் ஓடருக்கு செய்துகொடுக்கப்படும் விரும்பிய டிசைன்களில் பற்றிக் [Batick] ஆடைகள் பெற்றுக்கொள்வதற்கு வசந்தா ரெக்ஸ்ரையில்ஸ், [Vasantha Textiles] 42, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்,
[C 3130]

கோண்டாவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S கனகலிங்கம், நெட்டிலிப்பாய், கோண்டாவில். (C3235)

நாவற்குழி றெயில்வே ஸ்ரேசனிலிருந்து 300 யாருக்கு அப்பால் உள்ள கேரதீவு ரோட்டில் 32 பரப்பு தனியாருக்குரிய காணியும், (2) வீடும் சகல வசதிகளுடன் கூடிய 6 பரப்புக் காணி உடுவில் கந்தரோடை ரோட்டிலும், (3) கிளிநொச்சி 5-ம். வாய்க்காலில் நெற்காணி 12 ஏக்கரும் விற்பனைக்குண்டு. விளம்பர இல: C 3236, C/ஈழநாடு, யாழ்ப்பாணம். [C3236]

டீசல் என்ஜின் பொருத்தப்பட்ட [Austin A 90] கேம்பிரிஜ் கார் நல்ல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. சபாரெத்தினம், 9/6, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[C 3258)

எம்மிடம் N.V. 380 நஷனல் இன வீடியோ டெக் [புதியது] விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: பண்டிதர் S K. சிறீகாந்தலிங்கம் 22, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். [C3260]

வீட்டுத்தளபாடங்கள், அல்மாரி, Nursery தளபாடங்கள், Akai Stereo றேடியோ, Baby cot, Formica சாப்பாட்டு மேசை, Verandah Chairs, Book Shelf, எழுதுமேசை, சியெஸ்டா மெத்தைகள், Water Filter, கிளாஸ்வகைகள் மற்றும் பல உடன்விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். [மாவடிச் சந்தி] [C3262]

விருத்துக்கான, இறைச்சிக்கான கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. 'றெக்' என்ஜினியர்ஸ், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
[C 3269]

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற் - (1) சந்தஷஷ்டிகவசம், சந்தகுரு கவசம், (2) வாரியார் பிரசங்கம், (3) புதிய T M S பக்திப் பாடல்கள்-ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற், விபரக் கொத்து பார்வையிடலாம். பூபாலசிங்கம் புத்தக சாலை, யாழ்ப்பாணம்.
[C 3317]

சுன்னாகம் சந்தைக்கும், இராமநாதன் கல்லூரிக்கும் இடையில் உள்ள சபாபதி வீதிக்கு அருகில் வீடும், கடையும், 5 பரப்புக்காணியுடன் உடன் விற்பனைக்குண்டு. த. சுப்பிரமணியம், பெரிய மதவடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
[C 3319]

C-90, HONDA சொந்தப் பாவிப்பிலுள்ளது. நல்ல நிலை- புதிய மொடல். தொடர்பு:- 11 A, வளன்புரம், (சுவாமியார்வீதி), கொழும்புத்துறை.
(C 3308)

## விற்பனைக்கு

A/L மாணவர்களுக்கான "கணக்கியல் கோட்பாடுகள்" [Accountany Theory] சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [C3302]

A/L வகுப்பிற்கான யாழ். பிரபல ஆசிரியரின் "பொருளியல்" வினாவிடை சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [நியூ ஸ்ரார் வெளியீடு]
(C 3303)

நல்ல நிலையிலுள்ள கிறைண்டர் 12 அங்குலம், கிறைண்டர் 10 அங்குலம், அலர் நம்பர் 7, மோட்டர் $7\frac{1}{2}$ H P. ஸ்ராட்டர், மெயின் சுவிச் முதலியன உடன் விற்பனைக்கு உண்டு. ஜெயரத்தினம் ஸ்ரோர்ஸ், உரும்பராய் சந்தி.
(C 3288)

அல்சேஷன் நாய்க்குட்டிகள் அழகான தனி ரகம் Wormed and Weaned ஐந்து கிழமைகள்: Old No. 181, Temple Rd. Nallur
(C 3285)

காரைநகர் மல்லிகை புது ரோட்டுக்கு அருகாமையில் இருக்கும் நன்னீர் வசதியுள்ள 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்புகொள்ள த. கெங்காதரன் 124, 3ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்.
[C-3316]

நல்ல பாவிப்பில் உள்ள உஷா குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். செ. ஸ்ரீகரன் செந்தாமரை, 22/4, விதானையார்வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C - 3282

நீங்கள் விரும்பும் பத்து சினிமா பாடல் புத்தகங்களை 7/50 முத்திரை அனுப்பி தபாலில் பெறுங்கள் டேவிட் லிகோரி, 38, வேம்படி வீதி யாழ்ப்பாணம். (C 3312)

இலங்கையின் அரசியல் திட்டங்கள் என்ற நூல் விற்பனையாகின்றது விலை ரூபா 27/50 பேராதனைப்பல்கலைக்கழக அரசறிவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் அம்பலவாணர் சிவராசா அவர்களால் எழுதப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அரசியல் ஈடுபாடுகொண்ட பிறரும் வைத்திருக்கவேண்டிய அரிய தொரு பொக்கிஷம். பதிப்பாளர்: சிவா பிறின்டேர்ஸ், மெயின் வீதி, கைதடி
(C-3297]

## தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 32, பிரப்பங்குளம் ரோட், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (C 3280]

நீங்கள் பாவித்த இசைக் கருவிகளை (பியானோ, வயலின், கிட்டார், வீணை முதலியன) நல்ல விலைக்கு விற்க விரும்புகிறீர்களா? உடன் உங்கள் இசைக்கருவிகளின் விபரங்களுடன் விற்கவேண்டிய விலை உட்பட கடிதமூலம் எழுதி தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: நவீனைஸ், 390, பிரதானவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
[C 3071]

## தேவை

திருமணப் பொருத்தம், சாதகம் பார்க்கக்கூடிய முழுநேரம் வேலைசெய்யத் தகுந்த அனுபவமுள்ளவர்கள் உடனடியாக நேரில் வரவும் தொடர்பு;
Man Power Multi Services and Travel Consultant, 533, Stanley Road, Jaffna.
[C 3291]

நல்ல நிலையில் உள்ள சிறிய ஆண் பிள்ளைகள் ஓடக்கூடிய ஏசியா 20 அல்லது 18 அங்குல சைக்கிள் தேவை. நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்பு கொள்க இல: 12, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப் யாழ்ப்பாணம். [C 3287]

## சேவை

மின் விசிறி, மின் அடுப்பு, ரான்ஸ்போமர், மோட்டர் கிறைண்டர், வாசிங்மெஷின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த, றீவைண்டிங் செய்ய ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், (பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும்)
(C- 3217)

தரமான — தெளிவான "போட்டோஸ்ரட்" பிரதிகள் "றோனியோ" பிரதிகளுக்கும் சிறந்த தமிழ், ஆங்கில "ரைப்பிங்" வேலைகளுக்கும்; கிளீன்கட், 239, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
(C3203)

தமிழ், ஆங்கில அரசாங்க அனுமதிபெற்ற மொழிபெயர்ப்பாளர் ஆங்கிலத்தில் சிறந்த முறையில் கடிதங்கள் தயாரித்து டைப்செய்வார்கள் பாதுகாப்பான, வசதியான இடம்: கணபால ஸ்ரோர்ஸ், 24. மேல்மாடி, யாழ் நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C3294)

## வகுப்புகள்

Quantity Surveying [காலம்: 3 மாதம்] வகுப்பு ஆரம்பம்: 7-7-86 1-30 p m. விபரங்கட்கு: JAFFNA TECHNICAL INSTITUTE, 52/1, Stanley Road, Jaffna (C3239)

ரேடியோ, ரெலிவிசன் றிப்பியரிங் மீண்டும் புதிய பிரிவு வகுப்புகள் செய்முறைப்பயிற்சியுடன் ஆரம்பம்: 6 7-86. அனுமதிகள் 15ம் திகதிவரை வழங்கப்படும். விபரங்கட்கு; எலக்ரோனிக் ரெயினிங் சென்ரர், வி நித்தியானந்தன், கல்வளை சண்டிலிப்பாய்.
(C3313)

## வாடகைக்கு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கருகாமையில் காங்கேசன்துறை வீதியில் ஒருகடையும் வீடும் வாடகைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும் [விலையாகவும் பெற்றுக்கொள்ளலாம்] கு வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். [C 3257]

மானிப்பாய் தபாற்கந்தோருக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நேரில் வரவும்: தமயந்தி அச்சகம், மானிப்பாய். [C 3252]

## SERVICE

A Qualified Pharmacist looks for suitable employment. Part time considerd. Expects reasonable remuneration Advt No C-3296 C/o, Eelanadu, Jaffna. (C-3296)

## தவறிவிட்டது

எனது கார் லைசன்ஸ் புத்தகம் அளவெட்டி சீனன்கலட்டி பாடசாலைக்கு அருகாமையில் உள்ள திருமதி நவரத்தினம் என்பவர் வீட்டின் முன்னால் தவறிவிட்டது. இதனைக்கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து தில்லைநாதன், மிசன் பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும்விலாசத்திலோ அல்லது திருமதி நவரத்தினத்திடமோ ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(C3306)

## வாடகைக்கு

இருப்பிடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம்தேடுபவர்களுக்கு சாவகச்சேரியில் நிலைமை சீரடையும்வரை வசிப்பதற்கு வீடு உண்டு. கூடிய வாடகை அறவிடப்படமாட்டாது. 7-7-86 திங்கள் நண்பகல் 12—2 மணிக்குமிடையில் சந்திக்கவும். தொடர்பு: திருமதி சுப்பிரமணியம், இரத்தவங்கி, யாழ். அரசினர் வைத்தியசாலை. (C3310)

## கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் [O/L] [A/L] சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், No. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. or Sanmuka-Stores, 343, K. K. S. Road, Jaffna. (C-3315)

இந்தியாவில் உயர்கல்வி தொழிற்கல்வி பயிலவிரும்பும் மாணவர்களுக்கு கல்லூரி அனுமதியும் உணவு, தங்குமிட வசதியும் மற்றும் எல்லா London பரீட்சைகளுக்கும் பயிற்சியளித்து பரீட்சை எடுப்பதற்குரிய சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் விபரங்களுக்கு: ஹிரி ஹரன் என்ரபிறைஸ், 33, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
[C 3155]

## ஆங்கில ஆசிரியர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியாழன் வேலணை புங்குடுதீவு கல்விப் பிரிவிலுள்ள புதிய ஆங்கிலப் பாடநூலை அறிமுகப்படுத்துவது பற்றிநாலாம், ஐந்தாம் வகுப்பாசிரியர்களுக்கான கருத்தரங்கு ஜூலை 9-ம், 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முன்னர் நடைபெற்ற இக் கருத்தரங்குகளில் பங்குபெறத் தவறிய இதர கல்வி பிரிவுகளைச் சார்ந்த ஆசிரியர்களும் மேற்படி கருத்தரங்கில் பங்குபெற அழைக்கப்படுகிறார்கள்.

## வைத்தியம்

நாட்பட்ட நோய்கட்கு விசேட சிகிச்சை அளிக்கப்படும். ஜெயந்தி கிளினிக், 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[C 3164]

## காணவில்லை

வவனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி வயது 9 என்பவர் 12-6-86 முதல் 99/7, பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து காணமல் போய்விட்டார். இவரைக் கண்டால், தயவு செய்து வன்னியசிங்கம் 99/7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.
(C-3234]

## நினைவில் ஓராண்டு



அமரர்
R. J. S.
இராசரத்தினம்
(செல்வம்)
(முன்னாள் என்ஜினியர், சிமெந்து தொழிற்சாலை, K. K. S)

தோற்றம்: 27-10-1939
மறைவு: 06-07-1985
"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

மனைவி,
உறவினர்.

61, பாரதி லேன்,
யாழ்ப்பாணம்.
C 3307

## North Lanka Medical College Admission - September, 1986

Students who are eligible for Admission in Medical Colleges in Sri Lanka and Foreign Universities are requested to apply before 31st July, 1986 to the Director.

Application form, Prospectus and other particulars may be obtained on payment of Rs. 100/-

Director.

164. 4th Cross Street, Jaffna. Telephone: 23251
(A-909)

பஞ்சாப்---அஸ்ஸாம்---வரிசையில்

## ராஜீவ் காந்தியின் இன்னுமொரு சாதனை!

# மிஸோரம் பிரச்னைக்கு சாதுரியமான தீர்வு

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தமது குறுகிய அரசியல் பயணத்தில், நாட்டையும் அவரையும் கலக்கிவந்த இன்னெரு தேசியப் பிரச்னையைத் தீர்த்து வைத்துள்ளார்.

ஆம்! இவ்வாரம் அவர் மிஸோராம் தனி ராஜ்ஜியம் கோரிவந்த மிசோ தேசிய முன்னணியுடன் சமாதான உடன்படிக்கையொன்றினைச் செய்து கொண்டதன் மூலம் மேலுமொரு 'சமாதான உடன்படிக்கைச் சாதனையைப் புரிந்துள்ளார்.

— செந்தில்

### மிஸோரம்

இந்தியாவின் வட-கிழக்கு எல்லைப்புற மாநிலங்களில் ஒன்று மிஸோரம். இது, கிழக்கில் பர்மாவையும், மேற்கில் பங்களாதேஷையும் எல்லைப்புற நாடுகளாகக் கொண்டதால் இந்தியாவுக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாகும்.

சுமார் 8,400 சதுரமைல் பரப்புக்கொண்ட மிஸோரமில் [இலங்கையில் மூன்றிலொரு பங்கு] சுமார் 5 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாநிலமாகும்.

மிஸோரம் மாநிலம் 1891 இல் அஸ்ஸாம் மாநிலத்துடன் பிரிட்டிஷாரினுல் இணைக்கப்பட்டது. பின்னர் 72-ம் ஆண்டில் மிஸோரம் யூனியன் பிரதேசமாகியது.

மிஸோரம் மக்கள் இந்திய நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றனர் எனவும், நாட்டின் பல்வேறு துறைகளில் புறக்கணிக்கப்படுகின்றனர் எனவும் மாநிலத்தின் அபிவிருத்திக்கு கவனம் செலுத்தப்படுவதில்லை எனவும் கூறி அம் மாநில மக்கள் தனிநாடுகோரி 66-ம் ஆண்டிலிருந்து போராடி வருகின்றனர்.

தனிநாடு கேட்கப் போராடி வருவது திரு லால்தெங்கா தலைமையிலான மிஸோ தேசிய முன்னணியாகும். இதன் ராணுவப் பிவு மிஸோ தேசிய ராணுவமாகும். திரு. லால்தெங்கா ஓர் உத்தியோகப்பற்றற்ற ராணுவ வீரராயிருந்து பின்னர் விலகி தேசிய முன்னணிக்குத் தலைமைதாங்கிஞர்.

த்ஸோ தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கே சீன ராணுவப் பயிற்சியுடன் ஆயுதங்களும் வழங்கிவருவதாக ஒரு பொதுவான குற்றச்சாட்டிருந்தது. அத்துடன் பாகிஸ்தான் அரசும் தனது கிழக்குப் பிராந்தியத்தில் இப்போது பங்களாதேஷ் தேசிய ராணுவத்தினர்க்கு அடைக்கலம் அளித்துவந்தது உண்மையில் லால்தெங்கா கூட பங்களாதேஷில் தான் இருந்தார்.

ஆயினும் பின்னர் 71-ம் ஆண்டில இந்தியா பாகிஸ்தான் மீது படையெடுத்து கிழக்குப் பாகிஸ்தானை (பங்களாதேஷ்) மேற்குப் பாகிஸ்தானின் 'பிடி' யிலிருந்து பிரித்தபோது மிஸோ தேசிய ராணுவத்தினரின் முக்கிய தளம் பறிபோனது.

அதன்பிறகு மிஸோ தேசிய முன்னணித் தலைவர் லால்தெங்கா லண்டன்சென்று வசித்து வந்தார். மிஸோரமில் மிஸோ தேசிய ராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை சிறிதளவிலேயே மேற்கொண்டு வந்தனர்.

### 76-இல்

பின்னர் 76ம் ஆண்டில் மிஸோ முன்னணியுடன் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு திரு. லால்தெங்கா அப்போதைய பிரதமர் திருமதி காந்தியுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொண்டார். ஆயினும் திரு. லால்தெங்கா தாம் கைச்சாத்திட்ட உடன்படிக்கைப் பிரகாரம் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுடன் அவ்வுடன்படிக்கை செயலிழந்து போனது. திரு லால்தெங்கா லண்டன் சென்றபின்னர் மீண்டும் 84-ம் ஆண்டில் திரு லால்தெங்கா வரவழைக்கப்பட்டு இந்திய அரசு மிஸோ தேசிய முன்னணி பேச்சுக்கள் ஆரம்பமாகின.

ஆனல் பிரதமர் இந்திராவின் அகால மறைவையடுத்து இப்பேச்சுக்கள் தடைப்பட்டன.

### ராஜீவின் வருகை

இந்திராவுக்குப் பின்னர் பிரதமராகிய ராஜீவ், அரசி

(4ம் பக்கம் பார்க்க)

'பெரி'ஸ்கோப்

## பாதை தெரியுது பார்!

'சீப்பை ஒளித்துவைத்தால் கல்யாணம் நின்றுவிடும்' என்ற பாணியில் சில விஷயங்கள் நடைபெற்று வருகின்றன.

கொழும்புக்குப் போகும் மரக்கறி மற்றும் கருவாட்டு லொறிகளை நிறுத்திவிட்டால் வடக்கின் பொருளாதாரம் வற்றிப்போய்விடும் என ஆளும் வட்டாரம் நினைக்கிறது! கொழும்புச் சந்தையை நம்பியிருந்த காலம் மலையேறிவிட்டது என்ற உண்மையை யாழ்ப்பாணத்தான் உணரத்தலைப்பட்டுவிட்ட உண்மையை அந்த வட்டாரம் இன்னும் உணர்ந்துகொள்ளவில்லைப் போலும்!

வடக்கின் பொருளாதாரம் வற்றுவது அல்லது வற்ருமல் போவது வேறு விஷயம்.

ஆனல்......

''மாமியார் மீதான கோபத்தை மருமகள் அம்மியில் காட்டுவது' போல, விடுதலைப் போராளிகளின் வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் போனநிலையில் வடக்குப் பொருளாதாரத்தினது சமுத்தைப் பிடித்து திருகுகின்ற 'திருப்பணி'யில் ஆளும் வட்டார நாயகர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

'கையாலை கிழிக்கிற பனங்கிழங்குக்கு ஆப்பும் பல்லிட்டியும் இறுக்குவது'போல், எப்போதோ தீர்த்து வைத்திருக்கக்கூடிய 'நோயை' முற்றவைத்துவிட்டு இன்று அதைச் செயற்படுத்த ஹோமியோபதியா, அலோபதியா, யூனைியா... எந்தமுறை நல்லதெனக் காணுவகையில் கண்கெட்ட நிலையில், கறள்பிடித்த கத்தியை எடுத்து மாட்டு வைத்தியம் பார்க்கிருர் அந்த மஹா பெரியவர்!

நாட்டின் ஒருபகுதி மக்களை பட்டினிபோட்டு, அவர்களுக்கு ஒரு 'பாடம் புகட்டலாம்' என அவர் நினைத்தால் அது ஒரு பெரிய ஹாஷ்யமாகவே இருக்கும்; அல்லது அவரது அந்த நினைவை நிஜமாக்கும்வகையில் நம்மவரில் சிலர் நடந்துகொண்டால் அது அதை விடப்பெரிய ஹாஸ்யமாக இருக்கும்!

ருேட்டுப்பாதை சரியில்லையென்று காட்டுப்பாதைக்குப் போனுல், அதற்கும் தடை என்ருல், செல்லவேண்டிய சரியான பாதையை நிர்ணயிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டதென்பதே அர்த்தம்!

கந்தன் அருளை கவசமாகப் பெற நாம் உபவாசம் மிருப்பதில்லையா? ஆடிச் செவ்வாய். புரட்டாசிச் சனி, ஐப்பசி வெள்ளி... என தெய்வீகவழியில் ஒறுத்தும் பொறுத்தும் பழகிய நாம், கேவலம் பிணநதின்னிப் பேய்களின் நிர்ப்பந்தத்திற்கு அசைந்து கொடுக்கலாமா? அசந்துபோகலாமா?

சொந்தக்காலில் நின்று பழக இது ஓர் சோதனை; புரியுங்கள் சாதனை!

# நினைவில் நிலைத்த ஜூலை

'திரவியம்'

**1957** ஆடி அமவாசை அதாவது ஜூலை 26ம் நாள் அந்நாளில் இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா வுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆத்மார்த்த தலைவரான தந்தை எஸ். ஜே வி செல்வநாயகத்துக்கும் இடையே கனவான்கள் ஒப்பந்தமாக ஓர் இடைக்கால ஒப்பந்தம் கைச்சாத்தானது. (ஹன்சாட் தொகுதி 30 1309—1311ம் பத்திகள்)

1956 ஆனி5ம் நாளில் தனிச் சிங்கள மசோதா சட்டமானதை அடுத்து, சிங்களம் மட்டும் சட்டத்தைஆட்சேபித்து வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே ஒரு சாத்வீகசட்டமறுப்பு இயக்கம் ஒன்றை 1957 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தலைப்பட்டிருந்தது

கோப்பாய்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்கோப்பாய் கோமான் அமரர் கு. வன்னியசிங்கம் அவர்கள்தமது சட்டத் தொழிலைத் துறந்து வடக்குக் கிழக்கு மாகாணங்கள்தோறும் சுற்றுப்பயணம் செய்து சாத்வீக சட்டமறுப்பு இயக்கங்களில் பங்குபற்றுவதற்கான தொண்டர்களைப் பதிவு செய்து பயிற்சியும் அளிக்கும் முழுநேர இயக்கப் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்திருந்தார்.

சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து சாத்வீக சட்டமறுப்பில் இறங்குவதென்ற தீர்மானம் எழுந்தமான மாக மேற்கொள்ளப்பட்ட ஒருமுடிவாக இருக்கவில்லை.

1956ல சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து 1956ஆகஸ்ட் மாதத்தில் திருகோணமலையில் கூட்டப்பட்ட இயக்கத்தின் சிறப்பு மாநாட்டுக்குத் தமிழ் ஈழத்தின் எல்லைப்புறப் பெருநகரங்களாகிய பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மன்னர், வவனியா, முல்லைத்தீவு, திருக்கோயில், பட்டிருப்பு, மட்டக்களப்பு போன்ற இடங்களில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரைகள் திருகோணமலையில் சங்கமித்ததைத்தொடர்ந்து ஆரஅமரச் சிந்தித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இயக்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவருடகாலஅவகாசம் வழங்கி அக்கால எல்லைக்குள் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதபட்சத்திலேயே 1957 ஆகஸ்ட் திங்களில் சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதாகத் தீர்மானித்திருந்தது.

நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன அரசும் அசமந்தமாவே இருந்தது. ஆயினும் அமரர் வன்னியசிங்கம் தமது சட்டத் தொழிலைத் துறந்து தொண்டர்களைப் பதிவுசெய்து பயிற்சியளிக்க ஆரம்பித்ததில் இருந்து என்ன நிகழுமோ என்ற பரபரப்பு ஏற்பட ஆரம்பித்தது.

குறிந்த ஒரு வருடகாலம் முடிவடைவதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்க சாத்வீக சட்ட மறுப்புப் போராட்டங்களுக்கான திட்டங்களைத் தீட்டுவதற்கும், தீர்மானங்களை அறிவிப்பதற்குமான இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடும் முன்னறிவிக்கப்பட்டபிரகாரம் 1957 ஜூலை 27, 28ம் திகதிகளில மட்டக்களப்பில் கூடுவதற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தேறியபடியே இருந்தன.

1957 ஜூலை 26ல் இடைக்கால ஒப்பந்தமாக 'பண்டா செல்வா' ஒப்பந்தம் கைச்சாத்தாகிய செய்தி வானெலி, பத்திரிகைகள் வாயிலாகஅறிவிக்கப்பட்டதுமே ஏற்கெனவே போராட்ட அறிவிப்பை எதிர்நோக்கிக் களைகட்டியிருந்த இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மாநாடு தனது சோபையை இழந்து விட்டது.

உடன்படிக்கை குறித்துக் கருத்துரைக்கையில் அது தமிழருக்கு வெற்றியுமல்ல தோல்வியும்அல்ல வெற்றிக்கான முதல் அடியே என்று தந்தை செல்வா குறிப்பிட்டிருந்தார். இருப்பினும் மகாணங்களை எல்லைகளாகக் கொண்ட பிராந்திய சபைகள் மாகாண எல்லைகளைக் கடந்து மரபுவழியாக இணைந்து கொள்வதற்கான உறுதிமொழி ஒப்பந்த சுரத்தில் உள்ளடங்கியதாக இருந்தது.

மேலும் குடியேற்றத்திட்டங்ள் பிராந்திய சபைகளின் அதிகார வரம்புக்கு உட்பட்டனவாகவே விடப்பட்டிருந்தன.

தமிழ் மொழிக்குத் தேசிய சிறுபான்மையினர் மொழியாகவும் வடக்கிலும் கிழக்கிலும் நிர்வாக மொழியாகவும் அந்தஸ்தும்கூட வழங்கப்பட்டிருந்தது.

திம்பு மாநாட்டில் தமிழீழப் போராளிகள் முன்வைத்த நான்கு அடிப்படைக் கோரிக்கைகளில் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமை,மொழியுரிமை விடயம் சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவத் தாபனங்களுடனேயே பேசித் தீர்வுகாணப்படவிலக்கப்பட்டிருந்ததே மொழிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகளாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏனைய மூன்றும் ஏற்றுகொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிலை.

1983 ஜூலை 23ம் நாளில் தான் திருநெல்வேலியில் பலாலி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் பாதுகாப்புப் படையினர் 13 பேர் சிக்கி மரணமடைந்தனர்.

தமிழ்ப் போராளிகளின் தாக்குதல்கள் காரணமாக ஒரே எத்தனத்தில் முதன் முதலாக ஆகக் கூடுதலான பாதுகாப்புப் படையினர் மரணமடைந்தது அத் தாக்குதலின்போதுதான். அதனுல் சீற்றம் கொண்ட பாதுகாப்புப் படையினர் பழிவாங்கும் நடவடிக்கையாக 24ம் திகதியே யாழ்ப்பாணத்தின் பல்வேறிடங்களிலும் 50க்கும் மேற்பட்டோரைக் கொன்ருெழித்தனர்.

ஆயினும் 1983 ஜூலை 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபடியாலும், ஞாயிறு பதிப்புக்கள் நள்ளிரவு 12 மணிக்கு முன்பதாகவே அச்சுக்குப் போவது வழமை என்பதாலும் 1983 ஜூலை 23 விடிகாலை ஒரு மணிக்கு மேல் திருநெல்வேலி பலாலி வீதியில் நிகழ்ந்த சம்பவங்கள் 1983 ஜூலை 24 திகதி பத்திரிகைப் பதிப்புக்களில் இடம் பெறவில்லை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் சம்பந்தப்பட்டசெய்தியைத்தாமதித்தே ஒலிபரப்பிற்று.

சம்பந்தப்பட்ட செய்தி முதன் முதலாகக் கொழும்புப் பத்திரிகைகளில் 1983 ஜூலை 25ம் திகதி திங்கட்கிழமையே இடம்பெற்றது. சடலங்கள் நல்லடக்கத்துக்காகக் கொழும்பு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டமையால் பொரளையைச் சூழவுள்ள பகுதிகளில் 1983 ஜூலை 24ம் திகதியே இனக்லவரம் ஆரம்பித்துப் பின்னர் ஏனைய இடங்களுக்கும் தீவிரமாகப் பரவ ஆரம்பித்து.

(9ட பக்கம் பார்க்க)

# மாகாண சபைகளும் மக்கள் மயக்கமும்

மாகாண சபைகள் பற்றிய மாயை அண்மைக் காலங்களில் பலரை மயங்கவைத்துள்ளது. இதுவரை பத்திரிகைகள் மூலம் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் சாதாரண மனிதன் ஒருவனின் எண்ணப்பிரதிபலிப்புகள் எப்படியிருக்கும் என்பதைப் பிரதிபலிக்க இக்கட்டுரை முயலுகிறது. எனவே அரசியற் சித்தாந்தங்களின் அடிப்படையில் இக்கருத்துக்களை விவாதப் பொருளாக்கத் தேவையில்லை. மற்றவர்களின் சிந்தனையைத் தூண்டும் நோக்குடன் மட்டுமே இது எழுதப்படுகின்றது.

## தீர்வுகளை அளவிடுதல்

அரசியல் தீர்வுகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்தளவுக்குப் பூர்த்திசெய்யும் என்பதனை ஒரு சில அளவுகோல்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம். தேசியம், தேசிய இனம் என்ற விடயங்கள் அங்கீகரிக்கப்படுகின்ற இடத்தில் அதனுடன் கூடவே இன்னொரு நிபந்தனையும் பூர்த்திசெய்யப்படுகின்றது. அது தேசமாகும். தமிழ்மக்களின் பாரம்பரியபிரதேசம் என்ற ஒன்று அங்கீகரிக்கப்படாத நிலையில் தேசிய இனம் என்று எங்கு கூறப்பட்டாலும் அது பொருள் அற்றதாகும். ஒரு தேசிய இனம் எந்த தேசத்தில் வாழ்கிறது அல்லது அதனுடைய பாரம்பரிய பிரதேசம் எது என்பது வரையறுக்கப்படல்வேண்டும்.

சுயநிர்ணய உரிமை என்பதனை ஒரு இனம் எவ்வாறு ஆட்சி செய்யப்படல்வேண்டும் என்பதனை அந்த இனமே நிர்ணயிக்கின்ற உரிமை என்று இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். தமிழ்இனம் தன்னை ஆட்சிசெய்கின்ற உரிமையை வேறு ஒரு இனத்தின் பாராளுமன்றத்தில் தீர்மானிக்கலாம் என்கின்றநிலை இக்கருத்தைப் பழிப்பதாக அமையும். இதன் கருத்து யாதெனில் மற்ற இனம் எந்த நேரமும் தமிழ் இனத்தின் தலைவிதியை மாற்றி அமைக்கலாம் என்பதாகும்.

இறைமை என்கின்ற தத்துவம் தமிழ்மக்களைப் பொறுத்தவரை மிகவும் அபத்தமான எதிர்பார்ப்பு என்று சகலரும் நம்பவைக்கப்பட்டுள்ளார்கள். 1978ம் ஆண்டின் இலங்கைக் குடியரசின் அரசியலமைப்புப் படி மக்களின் இறைமை பாராளுமன்றத்தினூடாக செயற்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது ஆயின், தமிழ்மக்களது இறைமை ஆகாய வெளியில்தான் செயல்பட்டுள்ளது. தமிழ்மக்களின் பிரதிநிதிகளையே வறிதாக்கியதுடன் தமிழ்மக்களின் இறைமை பராதீனப்படுத்தப்பட்டது அல்லது கழிக்கப்பட்டது.

ஏனைய விடயங்களை விடுத்து பேலே கூறப்பட்ட தேசிய இனத்திற்கான அங்கீகாரம் அதாவது, பாரம்பரிய பிரதேசம், சுயநிர்ணய உரிமை, இறைமை போன்ற அளவுகோல்களை மட்டும் கொண்டு அணுகிஆராயின், எமக்கு வழங்கப்படவுள்ள மாகாண சபையின் உண்மையான செயற்திறனை அறிந்து கொள்ளமுடியும். இது யாதெனில் உத்தேச மாகாண சபைச் சட்டமோ, உத்தேச அரசியற் சீர்திருத்தமோ தமிழ் மக்களுக்கான பாரம்பரிய பிரதேசத்தை வரையறுக்காது சுயநிர்ணய உரிமை என்ற கருத்துக்கே இடமில்லை. ஏனெனில் தமிழ்மக்கள் தமக்குகந்த ஆட்சிமுறையைத் தாமே தீர்மானிக்கப்போவதில்லை. பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்படஇருக்கும் சீர்திருத்தம் அதே2/3 பெரும்பான்மையால் நீக்கப்படலாம் தமிழ்மக்களை கேட்டு இவை நடைபெற மாட்டா இவற்றிற்கான ஏற்பாடுகள் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## மாவட்ட அபிவிருத்திச் சபையும் மாகாண சபையும்

தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவென உருவாக்கிய மாவட்ட அபிவிருத்திச் சபை முறைக்கு வகைசெய்த சட்ட ஏற்பாடுகள் அதன் செயற்பாடுகளை கருவறுக்கக்கூடிய சில உள்வாரியான ஏற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தன எமது சட்டவியல் நிபுணர்கள் போகப்போக சரிக்கட்டலாம் என்று எதிர்பார்த்தார்கள்; ஆனல் எதிர்பார்த்தபடி அமையவில்லை.

இதுவரை வெளிவந்துள்ள பத்திரிகைச் செய்திகளின்படியும் மற்றும் அறிக்கைகளின் படியும் உத்தேச மாகாண சபைக்கான ஏற்பாடுகளிலும் இத்தகைய உள்வாரியான (Inbuilt) ஏற்பாடுகளைப் புகுத்துவதற்கான எண்ணங்களைக் காணக் கூடியதாகஉள்ளது.

சி. விஜயராணி

மாவட்ட அபிவிருத்திச் சபை சட்டத்தில்உள்ள பிரதான ஏற்பாடு ஒன்றின்படி 14துறைகளிலும் அவை தொடர்பான மந்திரிகள் தமது தீர்மானத்திற்கேற்ப சில கடமைகளையும் அதிகாரங்களையும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு வழங்கலாம் என்று இருந்தது. அது எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை. மாவட்ட அபிவிருத்திச்சபையைத் தோல்வியடையச் செய்த மிகமுக்கியமான உள்வாரியான ஏற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும். உத்தேச மாகாண சபைகளுக்கான ஏற்பாடுகள் இத்தகைய ஒரு ஏற்பாட்டைக் கொண்டுள்ளன. துறைகளைத் தனித்தனியாகக் குறிப்பிட்டு அந்த அந்த விடயங்களின் கீழான நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தினல் எடுக்கப்படும் தேசிய கொள்கைகட்கு இணங்கியதாக இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். கடந்த காலத்தில் தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டோ மேம்பாட்டின் பொருட்டோ எந்தப் பொருளாதார, விவசாய, கைத் தொழில், கல்விக் கொள்கைகளும் உருவாக்கப்படவில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறப்படும் பாராளுமன்றத்தில் இதன் பொருட்டான விசேட சட்டங்கள் எதுவும் ஆக்கப்படவில்லை. தென் பகுதி மக்களுக்கென வகுக்கப்பட்ட சட்டங்கள் தான் தவிர்க்க முடியாதபடி தமிழ் மக்களுக்கும் நன்மையாகப் பயன்பட்டன மாறாகத் தமிழ்மக்களின் நலன்கள் வீழ்ச்சியடையவேண்டுமென்பதற்காகவே இறக்குமதி வர்த்தகம். கல்வி, கைத்தொழில் மீன்பிடி என்பனவற்றின் தேசியக் கொள்கைகள் வழிநடத்தப்பட்டமைபகிரங்க உண்மையாகும்.

உத்தேச மாகாணசபை ஏற்பாடுகளின்படி இரண்டாம் நிலை நடுநிலைக் கல்விக்கு(Secondary Education) தொடர்பான விடயங்களில் மாகாணசபைகட்கு அதிகாரம்உண்டு அதன் கருத்து என்னவெனில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில்உள்ள உயர் கல்வி நடவடிக்கைகளின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவே நடுநிலைக்கல்வி அமைய வேண்டியது அவசியமாதலால் இச்சலுகை மகிழ்ச்சிக்குரியதல்ல.

மாவட்ட அபிவிருத்திச்சபை ஏற்பாடுகளின்படி கடன் பெறவோ, நிதியுதவி பெறவோ நிதி மந்திரியின் அனுமதி பெறவேண்டும். வரிகளை விதிக்கலாம் ஆனல் அது தொடர்பான உப விதிகள் பாராளுமன்றத்தினல் அங்கீகரிக்கப்படல் வேண்டும். உத்தேச மாகாணசபை ஏற்பாடுகளின்படி கடனுதவியோ, நிதியுதவியோ பெறுவதாயின் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும். எத்தகைய வரி விதிக்கலாம் என்பதைப் பாராளுமன்றம் வரையறுத்துக் கூறும். மத்திய அரசின் நிதிபொதுக்கீடு ஜனதிபதியால் நியமிக்கப்படும்நிதி கமிட்டியின் பரிந்துரைப்படிசெய்யப்படும். உற்று நோக்குமிடத்து இவ் ஏற்பாடுகள் புதியபாத்திரத்தில் வழங்கப்படும் பழைய கஞ்சியே தான்.

காணி மூகாமை தொடர்பாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்குஅதிகாரமளிப்பது தொடர்பான சட்டங்களில் மாற்றம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இது நடைபெறவில்லை. உத்தேச மாகாணசபைகளின் கீழ் சகல அரச காணிகளும் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானது. மாகாணசபை தனது தேவைக்கு மத்தியஅரசாங்கத்திடமிருந்து காணியைப் பெற வேண்டும். மத்தியஅரசாங்கம் அரச தேவையின் பொருட்டு நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் காணியைப் பயன்படுத்தும் உரிமை உடையதாகும். காணிக் கொள்கை தேசிய காணி ஆணைக்குழுவினல் தீர்மானிக்கப்படும். காணிப் பங்கீடு,குடியேற்றம்தொடர்பான கொள்கைகளும் அடிப்படைகளும் மத்திய அரசினல் தீர்மானிக்கப்படும் ஆனல் அமுலாக்கம் மாகாணசபைகளிடம் இருக்கும். இதில் குடியேற்றப்படுபவர்களைத் தெரிதலும் அடங்கும். மகாவலித் திட்டத்தின் கீழ் இன விகிதாசாரப்படி தமிழ்மக்களுக்கு நிலம் வழங்கப்படும். மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இனவிகிதாசாரத்தினரின் அளவிற்கு மேற்பட்ட காணிகள் சிங்களமக்களுக்கு வழங்கப்படும் அங்குள்ள இந்திய வம்சாவளித் தமிழரின் பொருட்டு அம் மாவட்டங்களில் காணி ஒதுக்கீட்டில் சில மாற்றங்கள் செய்யப்படும்.

கைத்தொழிலைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கமே கொள்கைகளைவகுக்கும். அதற்கிணங்க மாகாண சபைகள் கைத்தொழிலை முன்னேற்ற வேண்டும் தொடர்ந்தும் இருக்கும் விவசாயத்தைப்பொறுத்தவரையும் மானியங்கள், அடிமட்ட விலைகள், ஏனைய கொள்கைகள் என்பவற்றை தீர்மானிப்பது மத்திய அரசாங்கமே. இவ்விடயங்களைப் பொறுத்தளவில் மாகாண அரசாங்கங்களின்பணி தற்போது மாவட்ட மட்டத்தில் நடைபெறும் பணிகளே.

திருகோணமலையும் அதன் பின்னணி நிலமும் துறைமுக அதிகாரசபை ஒன்றிடம் இருக்கும். அப்படியாயினும் கூட அங்கு தொழில் வாய்ப்புக்கள் தமிழருக்குமட்டுமே இருக்க வேண்டும் என்பதற்கான உத்தரவாதம் எதுவும்இல்லை.

உத்தேசமாகாணசபைகளின் கீழ் உள்ள ஏனைய அம்சங்கள் குடை, கொடி, ஆலவட்டம், கார், ஜீப் போன்ற விடயங்கள் தொடர்பாகவே இருக்கும். எந்தவகையில் அலசி ஆராய்ந்தாலும், தமதுஅதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள தலைவர்கட்கு விருப்பமில்லை. அப்படிக் கொடுத்தாலும்கூட சிங்கள மக்களுக்கு ஏனைய மாகாணங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கப்பட்டு இன்றைய அதிகாரத்தைவிட அதிகமாக தமிழருக்கு எதையும் கொடுக்கத் தயாராகவும் இல்லை.

## மாகாணசபைக்குரிய விலை

இதுவரை இலங்கைஅரசாங்கம் தென் பகுதியில் அமுலாக்கிய தெருக்கள்பாலங்கள், நீர்த்தேக்கங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச்செலுத்துவதற்காக தமிழ் மக்களும் வரிசெலுத்துகிறார்கள். சீனி, மண்ணெண்ணை, மா, உரம் தொலைக்காட்சி போன்ற ஒவ்வொன்றினூடாகவும் வரி செலுத்தப்படுகின்றது. தமிழ் மக்கள்மீது ஏவி விடப்படும் கொலைகார ஆயுதங்களின் செலவுக்கும் கூட தமிழ்மக்கள் பணம் செலுத்துகிறார்கள். இது எதிர்காலத்தில் செலுத்தப்படவேண்டும். இந்தக்கணக்குகளைக் கூட்டிக்கழித்துப் பார்த்தால் தனிநாடொன்று பெறுவதற்கான செலவு குறைவானதாகவே இருக்கும். ஆகஇந்த மாகாணசபைகள் பெறுவதற்காகத்தான் ஆயிரக்கணக்கான உயிர்களையும், உடமைகளையும் விலையாகச் செலுத்தியுள்ளார்களா?

## தவிர்க்கமுடியாத சந்தேகங்கள்

சில சந்தேகங்கள் தவிர்க்க முடியாதபடி எழுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் திடீர் ஆர்வத்திற்குக் காரணம் இந்திய அரசாங்கமா அல்லது தமிழர்கள்பெலவீனமான கட்டத்தைஅடைந்துவிட்டார்கள் என்ற கண்டுபிடிப்பா? இந்திய

(9ம் பக்கம் பார்க்க)

# மிஸோரம் பிரச்னைக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யல் கற்றுக்குட்டி என கேலி செய்யப்பட்டபொழுதிலும், பதவியேற்றபின் மூன்று முக்கிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தினர். முதலாவது நாட்டில் அதிகரித்து வரும் இன. மத ரீதியில் கிளர்ச்சி, பிரிவினைப் பிரச்னைகளைத் தீர்ப்பது, இரண்டாவது- இந்தியாவின் அயல்நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்துவது. மூன்றுவது - இந்தியாவை தொழினுட்ப ரீதியில் நவீனமயப்படுத்துவது.

முதலாவது நோக்கின்படி ராஜீவ் பஞ்சாப், மிஸோ பிரிவினைவாதிகளுடனும், அஸ்ஸாம் கிளர்ச்சி வாதிகளுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்வந்தார்.

இவ்வாறு திரு. லால் தெங்காவுடனன பேச்சுக்கள் ஆரம்பமாகின. முதலில் பஞ்சாப், பின்னர் அஸ்ஸாம் இரண்டு பிரச்னைகள் தீர்க்கப்பட்டன. மூன்றுவது பிரச்னைக்கு இலங்கை பிரச்னையும் மிஸோ பிரச்னையும் போட்டி போட்டன.

ஆயினும்...

மிஸோ பிரச்னையே முதலில் தீர்க்கப்பட்டுள்ளது.

## சமாதான உடன்படிக்கை

மிஸோ தேசிய முன்னணியின் தலைவர் திரு. லால் தெங்காவுடன் இந்திய அரசு ஜூன் மாதம் 30ம் திகதி சமாதான உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் மிஸோராம் மாநில அந்தஸ்துக்கு உயர்த்தப்படும்; மிஸோ தேசிய முன்னணி அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்படும். தற்போது மிஸோராமை நிர்வகிக்கும் இந்திரா காங்கிரஸ் பதவி விலகி திரு லால் தெங்கா தலைமையில் இ. கா. மி தே. மு. கூட்டு முன்னணி பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறும் வரை மிஸோராமை நிர்வகிக்கும், தேசிய முன்னணி, தேசிய ராணுவம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் புனர்வாழ்வுக்கு மத்திய அரசு உதவும்.

இவற்றிற்கு பதிலாக மிஸோ தேசிய முன்னணி, தமது போராட்டத்தைக் கைவிடுவதுடன் ஆயுதங்களையும் கீழே போடும்.

இச் சமாதான உடன்படிக்கையையடுத்து, பஞ்சாப் அஸ்ஸாம் வரிசையில் ராஜீவ் தனது மூன்றுவது சமாதான வெற்றிறைக் கண்டுள்ளார்.

ஆனலும்.........

சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்வது எளிது; நடைமுறைப்படுவது கஷ்டம்.

பஞ்சாப், அஸ்ஸாம் சமாதான உடன்படிக்கைகளை நாம் சற்று ஆழ நோக்குவோமாயின் அங்கு பல பிரச்னைகள் தோன்றியுள்ளன. தோன்றக்கூடிய அறிகுறிகள் தெரிகின்றன.

பஞ்சாப்உடன்படிக்கைஇன்று பிசுபிசுத்துப்போகும் நிலைமை உள்ளது. அங்கே மீண்டும் வன்முறை தலைதூக்கியுள்ளது. அதாவது யாருடைய கையை (தீவிரவாதிகளில்) ராஜீவ் வலுவிழக்கச் செய்ய முயன்றாரோ, அவர்களின் கை ஓங்கியுள்ளது. பஞ்சாப் மக்கள் அகதிகளாகின்றனர்.

அஸ்ஸாமில் தீவிரவாத மாணவருடன் உடன்படிக்கை செய்து கொண்ட ராஜீவ் 'அஸ்ஸாம் பிரச்னை'க்குக் காரணமான பங்களாதேஷில் இருந்து குடிபெயர்ந்த மக்களின் நலனைக்கவனிக்கவில்லை. இன்று அவர்களில் பெரும்பாலானேர் அம் மாநிலத்தின் பிரஜைகளல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாளை அவர்கள் 'அஸ்ஸம் பிரச்னை -II' ஒன்றைக் கிளப்பலாம்.

ராஜீவின் இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் மிஸோ சமாதான உடன்படிக்கைக்கு ஊறு விளைவிக்க முயலலாம். ஏனெனில் புதிய உடன்படிக்கையின்படி மிஸோராமின் காங்கிரஸ் முதல்வர் பதவி விட்டுக்கொடுக்க வேண்டும், அத்துடன் இனிவரும் பொதுத் தேர்தலில் அம் மாநில மக்களின் நன்மதிப்பைப்பெற்ற கட்சியுடன் போட்டியிட வேண்டும்.

இவையெல்லாம் மிஸோராம் மாநில இந்திரா காங்கிரஸினரை புதிய சமாதான உடன்படிக்கையையிட்டு சந்தோஷப்படவைக்குமா அல்லது உடன்படிக்கை பிசுபிக்க அவர்களே முன் நின்றுஉழைப்பார்களா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம்.

எது எவ்வாறு இருப்பினும் இன, மத பேதங்களை ஒதுக்கிவிட்டு நாட்டின் நலனுக்காக பாடுபடும் ராஜீவின் இந்த முயற்சி நிச்சயம் பாராட்டப் படவேண்டியது.

இதுவரை ராஜீவ் செய்துள்ள சமாதான உடன்படிக்கைகள் வெற்றி காணவும், மற்றும் திரிபுரா, மணிப்பூர், நாகலாந்து ஆகிய மாநிலங்களிலுள்ள பிரிவினைவாதப் பிரச்னைகளை அவர் இதுபோல் அணுகித் தீர்க்கவும் அதன் மூலம் ஒற்றுமைமிக்க, அமைதியான இந்தியா ஒன்று உருவாகவும் அனைவரும் நிச்சயமாக விரும்புவர்.

ஏனெனில்.........

அத்தகைய ஒரு இந்தியாவே நமக்கும் நல்லது.

● தென்னாபிரிக்கா

# கறுப்பினமக்களின் துயரம்!

கூடின உழைப்புக்குப் பெயர் போனமக்கள், தொன்மையான பாரம்பரியம் கொண்ட மக்கள் ஆபிரிக்காவின் சுதேசிய கறுப்பினத்தவர். ஆனால் இன்றுஉழைத்துஉருக்குலைந்து, வாழ உரிமையின்றி, அமைதி இழந்து அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் விடுகின்றனர். இதற்குக் காரணகர்த்தா அன்று றொடீசியா (இன்றைய ஸிம்பாப்பே)வின் இயன்ஸிமித். இன்று ஸிமித்தின் வழியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுவரும் தென்னாபிரிக்க ஜனாதிபதி பீட்டர் போத்தார்.

வெள்ளைநிறத் தோலினர் கறுப்பு இனத்தவரை சுட்டுக் கொலைசெய்தால் அது நீதியின் பாற்பட்ட சட்டநடவடிக்கை. கறுப்பு இனத்தவர் வெள்ளை நிறத் தோலினரை சுட்டுக் கொன்றால் அது கண்டிக்கத்தக்க, அழிக்கப்படவேண்டிய பயங்கரவாதம். இது தென்னாபிரிக்க அரசின் இனஒதுக்கல்—நிறவெறி ஆட்சியின் மனிதவதை ஆட்சி அதிகாரச் சித்தாந்தம். கிளர்ச்சியாளர், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டனர் என்னும் குற்றங்களின் பேரில் 1985லிருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் வரை 1400 கறுப்பின மக்கள் தென்னாபிரிக்க அரச படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 12ந்திகதி தென்னாபிரிக்க ஜனாதிபதி பிரகடனம் செய்துள்ள நெருக்கடிநிலை—அவசரகால சட்டத்தின்கீழ் ஜூன் மாத இறுதிவரை பலஆயிரக் கணக்கிலான கறுப்பின மக்கள் கைதாகியுள்ளனர். பத்திரிகைத் தணிக்கை தீவிரமாக அமுலாக்கப்பட்டுள்ளது.

## 'இலட்சியத்தை அடைய வேண்டுமானால் மரணத்தின் நிழலில் நடைபயில வேண்டும் ..'—நெல்ஸன் மண்டேலா

### க. அருளானந்தன்

இனஒதுக்கல்-கறுப்பின அழிப்புப் படலத்தைத் தொடரும் தென்னாபிரிக்க ஆட்சிபீடத்தின் போக்கு உள்நாட்டிலும், அயலமைந்த ஆபிரிக்க நாடுகளிலும், சர்வதேச நாடுகளின் மத்தியிலும் பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது. இந்த இனவாத ஆட்சிக்கு அமெரிக்க ஐக்கிய அரசும், பிரிட்டனும் முழுப்பக்கபலமாக இருக்கின்றன.

இரண்டாம் உலகப் போரின் பின்னர், உலகில் பிரெஞ்சு, டச்சு, பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம்பெற்றன. தென்னாபிரிக்காவில் டச்சு ஆட்சி வீழ்ச்சியுற அந்த இடத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் நிரப்பிக்கொண்டன. பொருளாதார உதவிகள் மூலமாக பெரும்பான்மையினரான சுதேசிய கறுப்பினத்தவரை வந்தேறுகுடியினரான வெள்ளைநிறச் சிறுபான்மையினர்அடக்கி, ஒடுக்கி, அடிமைகளாக சர்வாதிகாரம் செலுத்தினர். இந்த வழியில் றொடீஷியாவில் இயன்ஸிமித் ஆட்சி தொடர கறுப்பினத்தவர் இதற்கு முடிவுகட்டி சுதந்திர ஸிம்பாப்பே அரசை நிறுவிக் கொண்டனர். இன்று பீட்டர் போத்தா தென்னாபிரிக்காவில் மனித உரிமைகளற்ற அடிமைகளாகக் கறுப்பரை கொடூர ஆட்சிபுரிகின்றார்.

தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா காலவரையின்றி வருடக்கணக்கில் சிறையிலிட்டு வாட்டி வதைக்கும் ஜனாதிபதி பீட்டர் போத்தாவின் அதிகாரக் கரங்கள் தென்னாபிரிக்காவுக்கு வெளியேயும் நீளத் தலைப்பட்டுள்ளன.

#### நமிபியா

தென்னாபிரிக்காவின் பிடிக்குள் இருக்கும் நமிபீய மக்கள் தமது விடுதலைக்காக ஓயாது போராடுகின்றனர். இந்த மக்களின் விடுதலை அமைப்பினை இந்தியா அங்கீகரித்து இராஜதந்திர அந்தஸ்து வழங்கியுள்ளது. தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், நமிபீயாவின் சுதந்திரத்திற்கும் பொதுநலவரசின் பிரதிநிதிகள் முயற்சிகள் மேற்கொண்டு வருகையில் கடந்த மாதம் ஸிம்பாப்பே, ஸாம்பியா, பொட்ஸ்வானா சுதந்திர ஆபிரிக்கா அரசுகள் மீது தென்னாபிரிக்க திடீர் விமானக்குண்டுத் தாக்குதலை நிகழ்த்தி வெற்றிக்களிப்பில் மிதக்கிறது.

#### அங்கோலாவில்

அயல்நாடான அங்கோலாவின் சுதந்திரத்திற்கு ஆபத்தைத் தென்னாபிரிக்க அரசு ஏற்படுத்தியுள்ளது. அங்கோலாவின் இடதுசாரி அரசை வீழ்த்தக் கிளர்ச்சி செய்து வரும் 'யூனிடா' கெரில்லாக்களுக்கு தென்னாபிரிக்க அரசு ஆயுத உதவிகள் செய்து கிளர்ச்சியாளரை ஊக்குவிக்கின்றது.

#### மொஸாம்பிக்

மொஸாம்பிக்குடன் தென்னாபிரிக்காவுக்கு ஆக்கிரமிப்புப் பிரச்னை தொடர் கதையாக நீடிக்கிறது. 1982 இல் ஆக்கிரமிப்புத் தவிர்ப்பு உடன்பாடு செய்த தென்னாபிரிக்க அரசு மொஸாம்பிக்குடன் மீண்டும் தகராற்றினை வலுவடையச் செய்தே வருகின்றது.

ஜூன் 19-ந் திகதி ஆபிரிக்க சுதந்திர முன்னணி அரசுகளான ஸிம்பப்பாபே, ஸாம்பியா, பொட்ஸ்வானா மீது அவற்றின் இறைமைக்கும், சுதந்திரத்திற்கும் மாறாகப் போர்ப்பிரகடனம் எதுவுமின்றி ஆகாய எல்லைக்குள் ஊடுருவி விமானத் தாக்குதல்களை நடத்தியது. கடந்த ஆண்டின் ஜூனில் தென்னாபிரிக்கா அரசின் படைகள் பொட்ஸ்வானா அரசின் எல்லையில் தாக்குதலை நடத்தின. 1985 ஜூலை முதல் திகதியன்று லூசாக்காவில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் மீது குண்டுத் தாக்குதலை நடத்தின. கடந்த ஆண்டு டிசம்பர் 19 இல் லெஸோத்தாவிலும் 27-ம் திகதி தவாஸிலாந்திலும் தென்னாபிரிக்க அரசபடைகள் ஊடுருவித் தாக்கின.

கடந்த ஆண்டுவரை தென்னாபிரிக்க அரசின் பிரதான இலக்காக அங்கோலா இருந்தது. இதனை அங்ககலோ நாட்டின் சுதந்திரத்தின் பின்னைய பத்து ஆண்டுகளில் 14 தடவைகள் மேற்கொண்ட பிரிட்டோரிய அரச படைகளின் தாக்குதல்கள் நிரூபிக்கின்றன. தற்போது அதன் கவனம் ஸிம்பாப்பே மீது திரும்பியுள்ளது.

தென்னாபிரிக்காவின் மூலவளங்களான தங்கம், வெள்ளி, வைரம், அணுகுண்டு உற்பத்திக்கான யுரேனியயம் போன்ற வளங்களைப் பெறும் அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களின் சுயநலனுக்காகக் கோடிக்கணக்கான கறுப்பின மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும் அவர்கள் ஒடுக்கப்படுவதும் ஜனநாயகத்தின் பாற்பட்டதா? இந்தப் பொருளாதாரச் சுரண்டலுக்காக மனிதவதைகள், சிறைக்கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள், இன ஒதுக்கல் - அழிப்பு ஆகியவற்றினை ஒட்டு மொத்தமாகச் செய்துவரும் தென்னாபிரிக்க அரசுக்கு பிரிட்டனும் அமெரிக்காவும் ஆதரவு வழங்குவதா? இந்த ஆதரவு நிறுத்தப்படுமானால் அதன் கொட்டத்தை அடக்கமுடியும்.

தென்னாபிரிக்க அரசின் மனித உரிமை மீறல், கறுப்பின ஒதுக்கல் கொடூரங்களுக்குச் ஸிம்பாப்பே பிரதமர் திரு. றொபட்முகாபே கூறியுள்ள ஆலோசனை ''ஆபிரிக்கத் தேசிய பாதுகாப்புப் படை''யை நிறுவி இன ஒதுக்கல் ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும் என்பதாகும். இந்த ஆலோசனையை முகாபே இம்மாதம் நடக்கவுள்ள ஆபிரிக்க நாடுகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கின்றார். இந்தப் படை அமைப்பின் முக்கிய நோக்கம் தென்னாபிரிக்க இன ஒதுக்கல் அரசை எதிர்த்துப் போரிடும் கெரில்லா விடுதலை அமைப்புகளுக்கு ஆயுத பொருளாதார உதவிகளை வழங்குவதே என்று அவர் விளக்கியுள்ளார். இதனை ஆபிரிக்காவின் முன்னணி நாடுகள் முழுமையாக ஆதரிக்கின்றன.

ஜனாதிபதி றேகனும், பிரதமர் தாட்சரும் நன்கு திட்டமிட்டே தென்னாபிரிக்க வர்த்தக நலனைப் பேணும்வகையில் அராஜகத்தையும், இன ஒதுக்கலையும் இலட்சியமாகக் கொண்ட தென்னாபிரிக்க அரசையும் பீட்டர்போத்தாவின் அதிகாரத்தையும் பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள். சமூக, நிற, இன வேறுபாடுகள், அதிகாரச்செருக்கு பலாத்காரமான ஒடுக்குமுறைகளுக்கு உலகின் எப்பாகத்திலும் அமெரிக்காவும், பிரிட்டனுமே இன்று மிண்டு கொடுத்து வருகின்றன.

சர்வதேச அரங்கில் பயங்கரவாதம், அநீதிகளுக்கு எதிராகவும் அவற்றினை அழித்தொழிக்கவும் கச்சைகட்டி நிற்கும் அமெரிக்காவே சர்வதேசபயங்கரவாதத்தின் பாதுகாவலனாக ஆபிரிக்காவில் தென்னாபிரிக்கா அரசின் மூலமும் கிழக்கிலே இஸ்ரேல், பாகிஸ்தான் மூலமாகவும் செயற்பட்டு வருகின்றது. பிரிட்டன் இதற்குப்பின்னால் நின்று கைவிட்டுப்போன காலனித்துவநாடுகளில் பொருளாதார ரீதியில் நவ கலோனியலிஸத்தை நிலைநாட்ட முயன்று வருகின்றது.

## அல்வை அம்பிகை பதம் தொழுவோம்

நல்லோர் போற்றும் நற்பதியாம்
நலங்கள் மேவும் பொற்பதியாம்
எல்லாச் சிறப்பும் சேர்ந்திடவே
எழிலுறும் மேன்மைப் பெரும்பதியாம்
அல்வையெனும் நற்பதியில்
ஆட்சி செய்யும் அம்பிகையின்
நல்ல பதங்கள் தொழுவோர்க்கே
நாளும் வினைகள் எய்தாவே.

—கனக. ஞானசுந்தரம்.

## டியாகோ மறடோனா:
# ஆர்ஜன்ரீன வெற்றியின் சிற்பி



பதின்மூன்றாவது ''உலகக் கிண்ண'' உதைபந்தாட்டப் போட்டி மெக்ஸிக்கோவில் முடிவடைந்துவிட்டது. 24 நாடுகள் 30 நாட்கள் நடாத்திய கர்ணகடூரமான 'சமர்' முற்றுப்பெற்றுவிட்டது. ''வெற்றித் தேவதை''; ஆர்ஜன்ரீனாவுக்கே தனது மாலையைச் சூட்டி விட்டாள்!

ஆர்ஜன்ரீனா 2-வது தடவையாக இக்கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டுள்ளது. 1978-ம் ஆண்டு தமது நாட்டிலே நடைபெற்ற 11-வது உலகக் கிண்ணப் போட்டியில் போலந்து கோஷ்டியை 3—1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, முதலாவது தடவையாக உலகச் சாம்பியனாகியது.

மெக்ஸிக்கோவில் இம்முறை வந்திருந்த 24 கோஷ்டிகளின் உதைபந்தாட்டத் தரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவை ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை எடுத்துக் காட்டுகின்றது. லத்தீன் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் உதைபந்தாட்டக் கோஷ்டிகளிடையில் தான் கடும் போட்டி நிலவக்கூடும் என உலக உதைபந்தாட்ட அவதானிகள் எதிர்பார்த்த பொழுதிலும் ஆசிய, ஆபிரிக்கக்கோஷ்டிகளிடமிருந்து கடும் எதிர்பாராத போட்டியைச் சந்திக்க நேர்ந்தது.

குறிப்பாக, ஆசிய நாட்டுக் கோஷ்டிகளான தென். கொரியா, ஈராக் கோஷ்டிகளிடமிருந்து கிடைத்த எதிர்ப்பை ஐராப்பிய - லத்தீன் அமெரிக்கர்கள் மிகவும் கஷ்டப்பட்டே சமாளித்தார்கள். தற்போதைய சாம்பியனான ஆர்ஜன்ரீனாவும், முன்னாள் சாம்பியனான இத்தாலியும் தென். கொரியவுடன் மோதிய போது மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே தமது வெற்றியை ஈட்டிக்கொண்டன.

#### முதல் சுற்றுப் போட்டிகள்

முதல் சுற்றுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய பிரேஸில், ரஷ்யா, டென்மார்க், மெக்ஸிகோ கோஷ்டிகள் பிற்பகுதிகளில் எதிர்பாராத தோல்விகளைத் தழுவியது வியக்கத்தக்கதாகும். மேற்கு ஜெர்மனியை 1—0 கோலால் வெற்றிபெற்ற டென்மார்க், பிரேஸிலிடம் தோல்வியடைந்த ஸ்பெயினிடம் 2-வது சுற்றுப் போட்டியில் 5—1 கோல்களால் தோல்வியடைந்தது ஆச்சரியப்படத்தக்கது.

● 'தேவா'

கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சிறப்பாக முன்னிலையில் நின்ற பிரேஸில் கால் இறுதியாட்டத்தில் பிரான்ஸிடம் ''பெனால்டி-பிறேக்கில்'' தோல்வியடைந்துவிட்டது என்ற செய்தியைக் கேட்டதும், பலர் அதிர்ச்சியால் இறந்துவிட்டார்கள்; வேறு சிலர் மூளைப் பாதிப்பால் வீதிகளில் அலைவதாகத் தெரியவருகிறது.

#### இங்கிலாந்து வெளியேறியது

ஆர்ஜன்ரீனாவும், இங்கிலாந்தும் மோதிய போட்டியில் இங்கிலாந்து தோல்வி அடைந்ததும், மத்தியஸ்தரையும், தற்போது சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்ட டியாகோ மறடோனாவையும் குறைகூறிக்கொண்டு மெக்ஸிக்கோ நகரைவிட்டு உடன் வெளியேறியது வேதனைக்குரிய செயலாகும்.

#### மே. ஜேர்மனி

ஆரம்பப் போட்டிகளில், மே. ஜேர்மனியின் ஆட்டம் எடுபடாவிட்டாலும், பிந்திய போட்டிகளில் சிறப்பாக ஆடியது குறிப்பிடத்தக்கது. இதுவரை நடைபெற்று முடிந்த 13 உலகப் போட்டிகளில் மே. ஜேர்மனி 5 தடவைகள் இறுதியாட்டத்தில்விளையாடத்தகுதி பெற்றது ஒரு சாதனையாகும்.

(8ம் பக்கம் பார்க்க)

● ஆரம்பக் கல்வி

# மரபுவழித் தமிழ்க்கல்வியின் மாட்சியும் வீழ்ச்சியும்

(முன் தொடர்ச்சி)

இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த சிங்கள மக்களிடையே ஆதிகாலத்தில் பிராமணக் கல்விமுறையும், பௌத்தமதம் புகுத்தப்பட்ட பின்னர் பௌத்தக் கல்வி மரபும் இடம்பெற்றிருந்தன.

"கி. மு. 543ஆம் ஆண்டில் விசயன் வந்த காலத்திலிருந்து அதாவது ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கையிற் பிராமணர்கள் மிகமுக்கியமான ஓர் இடத்தை வகித்து வந்தனர். அவர்கள் வட இந்தியாவில் முதன்மைவாய்ந்தவர் கூறமுடியாது. தமிழ் மரபுக் கல்வியே இவர்களிடம் இடம் பெற்றிருந்தது.

கி. மு. மூன்ரும் நூற்ருண்டு தொடக்கம் பௌத்த சமயம் இலங்கையில் புத்தப்பட்ட பின்னர், பௌத்தக் கல்வி மரபே வலுப்பெற்றிருந்தது விகாரைகளில் மாணவர்களைச் சேர்த்துப் புத்தபிக்குமார் அவர்களுக்குக் கல்வியையளித்தனர். எல்லோருக்கும் கல்வியைப்பெற வாய்ப்பிருந்தது. இக்காலத்திலும் பிராமணர்களின் கல்விச்செல்வாக்கும் தொடர்ந்திருந்து வந்தது. புத்தகுருமாரினுல் போதிக்க

## கு. சோமசுந்தரம்
(பிரதம கல்வி அதிகாரி)

களாயும், மதிப்புக்குரியவர்களாயும் வாழ்ந்தனர். இதே மதிப்பையும் முதன்மையையும், இலங்கையிற்குடியேறிய வட-இந்திய மக்கள் அப்பிராமணர்களுக்கு இங்கும் வழங்கினர்."—[இலங்கையிற் கல்வி, அத்தியாயம் I, பக் 5]

பிராமணக் கல்விமுறை வட இந்தியாவில் வலுப்பெற்றிருந்தது பிராமணர்கள் இலங்கைக்கு வரும்போது தாம் கற்றறிந்த கலைச் செல்வங்களையெல்லாம் இங்கும் தம்முடன் கொணர்ந்தனர். அரச குடும்பத்தவர்களுக்கும், உயர்குடிப் பிறப்பாளருக்குமே பிராமணர்கள் அவரவர்க்குரிய கல்வியை அளித்தனர். எல்லோர்க்கும் கல்விகற்க வாய்ப்பு இருக்கவில்லை.

இப்பிராமணக கல்விமுறை, ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்றதாகக் முடியாத அரசியல், போர் முறைகள், இசை என்பன பிராமணர்களால் அரசகுலச் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன.

இதேகாலத்தில் தென்னிலங்கையின் பௌத்தக்கல்விமுறைகள், வடஇலங்கைத் தமிழர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. தென்னிந்தியாவில் சைவ சமய மறுமலர்ச்சி காரணமாக, பௌத்தசமயம் வலுவிழந்தும் பின் அகற்றப் பட்டும் இருந்தமையினுல், அந்நாட்டுடன் சமய, பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்த ஈழத்தமிழர்களும் பௌத்த சமயக் கோட்பாடுகளையும், கல்விமுறைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஈழத் தமிழ் மக்களிடையே, ஆதிகாலந்தொடக்கம் பதினைரும் நூறருண்டில்போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும்வரை, தனித்துவம் வாய்ந்த தமிழ்க்கல்வி மரபுதொடர்ச்சியாகவளர்ந்து வந்துள்ளது.

### போர்த்துக்கேயர் காலம்
[கி. பி. 1505—1658]

இலங்கையில் போர்த்துக்கேயர் வருகையுடன் எமது மரபுவழிக் கல்விக்குப் பெருந் தாக்கம் ஏற்படத்தொடங்கியது. ஐரோப்பிய பாரம்பரியத்தைத் தழுவிய கல்விமுறை இலங்கையில் புகுத்தப்பட்டு, நன்கு நிலைகொள்ளத்தொடங்கிய காலமும் இதுவேயாகும். ஐரோப்பியக் கல்விப் பாரம்பரியம் எமது நாட்டில் அமைதியாகப் படிவதற்கு ஏகாதிபத்திய மேலாதிக்கம் துணை நின்றது. கிறித்தவ சமயப் பிரசார நடவடிக்கைகளுக்கும், அந்நிய அரசாட்சியை நிலைபெறச்செய்வதற்கும், அவர்களின் வர்த்தக மேம்பாட்டிற்கும் உடன்பாடான கல்வி முறை நமது நாட்டில் உருவானது இரண்டாவது பாரம்பரியமாக விளங்கிய இக்கல்வி முறையும் இலங்கையில் நிலையான சுவடுகளைப் பதித்துள்ளது.

பாடசாலை அமைப்புடன் ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி முறைமை, முதன்முதலாகப் போர்த்துக்கேயர் காலத்திலேயே நம்நாட்டில் புகுத்தப்பட்டது. அரசின் அனுசரணையுடன்பிரான்சிசுக்கன், இயேசு, தொமினிக்கன், அகுஸ்தீன் சபையினர் பாடசாலைகளை அமைத்துக் கல்வி புகட்டினர். இக்கத்தோலிக்க சமயக் குழுக்களின் முதன்மை நோக்கம், கல்வியைக் கருவியாகக் கொண்டு இந்நாட்டு மக்களை மதமாற்றம் செய்வதேயாகும். கத்தோலிக்க சமயமும், அச்சமயப் போதகர்களுமே கல்வியில் ஆதிக்கம் செலுத்தும் ஏதுக்களாக முன்னின்றன. பாடசாலைகள் இவற்றின் முகவர் நிலையங்களாக விளங்கின. போர்த்துக்கேய அரசு, கல்வியளிப்பதில் நேரடி ஈடுபாடு கொள்ளாது, கத்தோலிக்க சமயக் குழுக்களிடமேயே இப்பொறுப்பினை ஒப்படைத்தது.

இந்நாட்டினைப் பல கோயிற்பற்றுக்களாகப் பிரித்து, கோயிற்பற்றுக்கள் தோறும் கோயில்களும் அவற்றை அண்டிப் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. கோயிற்பற்றுப் பாடசாலைகள் ஆரம்பக் கல்வியையளித்தன. யாழ்ப்பாணத்தில் 25 இத்தகைய பாடசாலைகள் இருந்தன.

ஆரம்பக் கல்வி சுதேச மொழிகளிலேயே அளிக்கப்பட்டது. சமயச் சார்பானதாகவே விளங்கியது. வாசிப்பு, எழுத்து, சமயம், எண், பாட்டு, நற்பழக்கம் என்பன ஆரம்பக் கல்விப் பாடவிதானத்தில் இடம்பெற்றிருந்தன. இசையும், நாடகமும் சமயத்தைப் பரப்பும் கருவிகளாகக் கைக்கொள்ளப்பட்டு, அவை பாடசாலையிலும் இடம்பெறச் செய்யப்பட்டன.

பாடசாலை அதிபர்களாகக் கத்தோலிக்கக் குருமார்களே நியமிக்கப்பட்டனர். பாடசாலை அமைத்தல், கல்வி நிர்வாகம், மேற்பார்வை, ஆசிரிய நியமனம், பயிற்சி, வேதனம் வழங்கல் போன்ற சகல கல்விச் செயற்பாடுகளும் கத்தோலிக்க திருச்சபையிடமே இருந்தன.

ஆரம்பக் கல்வியைக் கற்கும் வாய்ப்பு எல்லோருக்கும் அளிக்கப்பட்டது. அது இலவசமாகவும் வழங்கப்பட்டது. அத்

(8-ம் பக்கம் பார்க்க)

## அரும் பொருள் அனைத்தும் நீக்கும்

இன்பமே போலக் காட்டி
இடும்பைகள் கொடுக்கும் போதை
துன்பமே செய்து இளமைத்
துடிப்பையும் அடக்கி ஆண்டு
என்புமே உருக வைத்து
எண்ணில்லாத் தொல்லை சேர்க்கும்
அன்புமே அழிந்து போகும்
அரும்பொருள் தொலைந்து குன்றும்

உருவினை அழித்தே மேலாம்
உயிரினைக் குடிக்கும் நல்ல
திருவினை ஒழித்தே சேர்ந்த
திறலினை ஒடுக்கி வாழ்வின்
அருவினை எல்லாம் போக்கி
அழிவினை நல்கும் இளைஞர்
கருவினை மாற்றி ஈற்றில்
கவலையால் மடியச் செய்யும்

போதைகள் அளிக்கும் அந்தப்
புன்மைசேர் 'வஸ்து' தன்னுல்
பேதைகள் ஆன பேர்கள்
பெண்களு மாண்கள் தாமும்
நோ தல்கள் பெற்றே வாழ்வை
நொடியினில் இழப்பர் அன்றே
ஊதையின் காற்றைப் போன்றே
உயிருமே ஊசல் ஆடும்

மேற்குயர் நாட்டின் மக்கள்
மேட்டிமை என்றே எண்ணி
ஆர்க்குமே தெரியா வண்ணம்
அருந்துதல் கண்டே ஆட்சி
பார்க்குளே பெரிய தண்டம்
பரிசென அளித்தல் கண்டும்
ஊர்க்குளே கொண்டு வந்தே
உறுதொழில் செய்வோர் ஒழிக

முருகவே பரமநாதன்

## உள்ளூர் உலக அரசியல் நிலைக் கண்ணாடி

**1956ம்** ஆண்டில் இது நடந்தது.

பின்லாந்தின் தலைநகரில் அப்போதுதான் ஒரு பெரிய தபால் நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. இந்தத் தபால் நிலையத்தில் பின்லாந்துமொழியினையோ, சுவீடிஸ் மொழியினையோ முகப்பில் போடுவது என்ருெரு சச்சரவு எழுந்தது பின்லாந்தில் பத்தில் ஒரு பங்கினரே சுவீடிஸ்காரர்கள் இது தொடர்பாகக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டும் தீர்க்கப்படாமல் அவை ஆர்ப்பாட்டங்களாகவும் மாறின.

"Posti" என்பது தபால் அலுவலகத்தைக் குறிக்கும் பின்லாந்துச் சொல் "Post" என்பது அதன்சுவீடிஷ் மொழியாக்கம்.

இந்தச் சச்சரவைத் தீர்க்கப் பாராளுமன்றம் கூட்டப்படவில்லை மாநகர சபை 24 மணி நேரத்தில் கூட்டப்பட்டது.

அதன்படி தபால் அலுவலகத்தின் முன்பு ,'Posti'' என்ற சொல் நியோன்விளக்குகளால் அமைக்கப்பட்டது. இப்போது "I" என்ற எழுத்தே பிரச்சனைக்கு உரியதாக இருந்தது. சனத்தொகை அடிப்படையில் சுவீடிஸ் இனத்தவர்கள் பத்தில் ஒரு பங்கினர். ஆகையால் பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை; ஒருநிமிடம் மட்டும் "I" எழுத்து வெளிச்சத்திற்கு வருவது நிற்பாட்டப்படும். பிரச்சனையை மாநகர சபை தீர்த்தவிதம் உலகையே மூக்கின்மேல் விரலைவைக்க வைத்தது.

இலங்கையிலும் அதே வருடத்தில் ஓர் அரசியல் அற்புதம் அரங்கேறியது. அதுவே 24 மணி நேரத்தில் சிங்களம் அரசகரும மொழியானது.


கோட்டைப் புகையிரத நிலையத்தின் நடுவில் தமிழிலே எழுதப்பட்டிருந்த தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டுப் பக்கப்பாட்டிற்கு நகர்ந்தன.

அது எல்லாம், எமது இராணுவத்தின் இயக்கச்சி நோக்கிய வருகையால்தான் கூர்மையடைந்தது. நல்லவேளை எமக்குச் "சாண்ட் கிரீச்" பரிசுகள் கிடைக்கவில்லை. வடக்கேவந்த இராணுவம் தெற்கே போனதுடன் சரி. "இந்நிகழ்ச்சி இன்றுபோய் நாளை வா" என்ற கம்பரின் அடிகளையும் எமக்கு ஞாபகப்படுத்தத் தவறவில்லை. மொத்தத்தில் ராணுவத்தீர்வு இனி உதவாது என்பதை அரசு திரும்பிப் பார்க்குமா? இல்லாவிடில் தெற்கில் தாக்குதல் நடந்தால் வடக்கே தாக்குதல் என்ற பழைய குருடிக் கதைதாஞ என்பதைத் தமிழர்கள் அவதானித்துக் கொண்டிருக்கிருர்கள்.

★

### மண்டை ஓட்டு ஆய்வு

ஐரோப்பிய வரலாற்றில் ஹப்ஸ்பேர்க் வம்சமும், பேர்



போண் வம்சமும் ஆட்சி செய்த காலங்கள் மகத்தானவை. புதைகுழிகளில் ஆராய்ச்சி நடத்திய ஆய்வாளர்கள் சில மண்டையோடுகளை எடுத்து இது பேர்போண் வம்சம், இது ஹப்ஸ்பேர்க் வம்சம் என ஆராய்ந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். எமது இனப்பிரச்னை விவேகமான அடிப்படையில் தீர்க்கப்படாவிட்டால் அத்தகைய வம்சப் புதைகுழி வரலாறுகள் இங்கும் உண்டாகலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் பேசிக்கொள்கின்ருர்கள்.

★

### கழுதைகள் வயல் உழும்

லிபிய அதிபர் கடாபி பற்றித் திடீரென எனக்குச் சிந்தனை எழுந்தது. யாழ்ப்பாணத் தமிழில் இவருக்குப் பரிச்சயம் இருந்திருந்தால் மண் அள்ளித் திட்டுவதற்கு வசதியாக இருந்திருக்கும் என எண்ணிக்கொண்டேன். சமீ

## திக்கவயல் தர்மகுலசிங்கம்

ஐரோப்பிய நாடுகளும், ஆசிய நாடுகளும் மொழிப் பிரச்சனையை எவ்வாறு கையாண்டன என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணம். இலங்கை இன்று அமைதியின்றி நாளுக்கு நாள் மனித உயிர்கள் பலிபோவதற்கு நாடு மொழிப் பிரச்சனையில் கடைப்பிடித்த போக்கே காரணம்.

★

### இன்றுபோய் நாளைவா

1864ம் ஆண்டில் செவ்விந்தியர்களை ஒழிப்பதற்கு 'சாண்ட் கிரீச்' என்ற இடத்தில் அமெரிக்க ராணுவம் அடி எடுத்து வைத்தது. இந்த இன ஒழிப்பு நாடகம் வெற்றியில் முடிந்தது. இலட்சக் கணக்கானோர் படுகொலையில் இறக்க மிகுதியானோர் கட்டாயக் குடியிருப்புகளுக்கு நகர்ந்து சென்ருர்கள்.

செவ்விந்தியர்கள் சிந்திய குருதியின்மேல் புற்கள் முளைத்துவிட்டதால் அவர்கள் சிந்திய ரத்தம் மறைக்கப்பட்டுவிட்டது என ஒரு கவிஞர் பாடினர்.

இந்தச் செவ்விந்தியர்கள் பற்றிய பூர்வ பீடிகைகள் எல்லாம் உங்களுக்கு ஏன் என்று நீங்கள் கேட்கக்கூடும்.

பத்தில் லிபியாவைத் தாக்கிய அமெரிக்கா தனது கருத்தை வலியுறுத்த டோக்கியோவில் கூடிய உச்சிமகாநாட்டைப் பயன்படுத்தியது. அவர்களைப் பார்த்தே லிபிய அதிபர் "நாசமாய்ப் போக" என்று திட்டியதுடன் உங்கள் நாடு மண்மூடிப்போக என வைதுள்ளார். அது மாத்திரமல்ல - "மேற்கு நாடுகளே உங்கள் டிராக்டர் எமக்குத் தேவையில்லை எமது நாட்டிலுள்ள கழுதைகள் இனி வயல் உழும்" எனச் சூளுரைத்தார். இந்தப் பேச்சு இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இலங்காசயர் துணிகள் கொளுத்தப்பட்டதையே ஞாபகப்படுத்தின.

எல்லாம் இருக்கட்டும் கேர்ணல் கடாபி பல்கலைக் கழகங்களில் இருந்த பிரெஞ்சு, ஆங்கில்நூல்களை எரித்துவிட்டார்! இது நியாயம் தானு?

★

### அமெரிக்கா சிந்திக்குமா?

அமெரிக்காவில் உள்ள வறிய மக்களின் வாழ்வுக்காக அமெரிக்கமக்கள் கைகோர்த்து நின்ற நிகழ்ச்சி சமீபநாட்

(8 ம் பக்கம் பார்க்க)

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

✶ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## 16

அந்த மாலை வேளையிலே—

முருகன் கோயில் மண்டபத்தில் நாலைந்துபேர் கூடியிருந்தார்கள். கோயில் பூசைக்கு நேரமாகிவிட்டாலும், இன்னும் பூசை ஆரம்பமாகவில்லை.

கூடியிருந்த கூட்டத்தில் தங்கலட்சுமி பிரதான இடத்தை வகித்தாள், அவளுடன் பாக்கியம், பர்வதம், மங்கையர்க்கரசி, தனவதி ஆகியோர் இருந்தார்கள்.

''என்ன இன்னும் செல்லம்மாவைக் காணேல்லை'' என்று தங்கலட்சுமி ஏனையோரைக் கேட்டாள்.

''அதுதான் எங்களுக்கும் விளங்கேல்லை, வழக்கமாய் செல்லம்மாதான் எங்களுக்காக காத்திருப்பாள். இன்றைக்கு நாங்கள் அவளுக்காக காத்திருக்கவேண்டிருக்கு'' என்றாள் ஒருத்தி

தினசரி சனங்கள் கோயில் பூசை தொடங்குவதற்கு வெகு நேரத்துக்கு முன்பே அந்த இடத்துக்கு வந்து கூடியிருந்து கதைப்பார்கள்.

கோயில் பூசையைப்பார்த்து முருகனை வழிபடாவிட்டாலும், பரவாயில்லை. சேர்ந்து கதைக்காவிட்டால் மனக்குறையாக இருக்கும் அவர்களுக்கு.

இன்று வழக்கம்போல அவர்கள் கூடியிருந்தாலும் செல்லம்மா இல்லாதது பூரணமானதாக இருக்கவில்லை. தங்கலட்சுமிக்கு செல்லம்மாவை அவசரமாக காண வேண்டியிருந்தது.

வசந்தமலர் பற்றி சற்று நேரத்துக்கு முன்னர் தங்கள் வீட்டுக்கு வந்து சாரதாவிடம் கூறியது பற்றி பூரணமாக அறிவதற்கு வெகு ஆவலோடு செல்லம்மாவை எதிர்பார்த்தாள் தங்கலட்சுமி.

''கொஞ்ச நேரத்துக்கு முதல் வீட்டை வந்தவளாம். பிறகு எங்கை போனாளோ. தெரியாது'' என்று தங்கலட்சுமி சொல்லிக்கொண்டிருக்கும் போதே.

''அங்கை செல்லம்மா வருகுது'' என்று யாரோ சொன்னார்கள்.

வியர்க்க விறுக்க செல்லம்மா கோயிலின் பிற்பக்கத்தில் இருந்து வந்தாள்.

''என்ன செல்லம்மா இந்தப் பக்கத்தால'' என தங்கலட்சுமி கேட்டாள்.

''சும்மா உதில பெரியக்கா வீட்டை போட்டு வாறன்'' என்று அவள் சொன்னாள்.

ஆனால் உண்மையில் கோயில் பின்வளவில் பொன்னம்பலத்துடன் கதைத்துவிட்டுத்தான் செல்லம்மா வந்திருந்தாள். பொன்னம்பலத்திடம் உறுதி செய்தபடி. அந்தக் கதைகளைப் பற்றி அவள் மூச்சுவிடவில்லை.

செல்லம்மா அவர்களுடன் சேர்ந்து அமர்ந்தாள்.

''என்ன செல்லம்மா அப்போதை வீட்டுக்கு வந்தனியாம். வசந்தமலரைப் பற்றி என்னவோ சொன்னதாக சாரதா சொன்னாள்'' என்று தங்கலட்சுமி பேச்சைத் தொடக்கினாள்.

''ஓமோம் அதற்காகத்தான் வந்தனான். உன்னைக் காணேல்லை. பிறகு திரும்ப வந்திட்டன்'' என்றாள் செல்லம்மா.

''என்னவோ வசந்தமலரின் கதை என்று கதைச்சியள். அவளுக்கு என்ன'' என்று கேட்டாள் ஒருத்தி-

''அவள் என்ன காலமை பின்னேரத்தில கேற்றடியில் நிற்கிறாள். பொழுது பட்ட நேரத்தில ஒரு தடிச்ச உடம்புக்காரன் அடிக்கடி ஒழுங்கையால் போய்வாறான். அன்றைக்குப் பார்த்தன் அவளோடை நின்று அவன் கதைச்சுக்கொண்டு நின்றவன்''

''அந்த தடியன் யார் என்று தெரியுமே''

''அது யாருக்கு தெரியும்''

''அதைப்பற்றித்தான் கேட்பம் என்று வந்து அவளோடை சும்மா கதை கொடுத்துப் பார்த்தன். அவள் என்னோடை வாய்காட்டத் தொடங்கிவிட்டாள். இந்த செல்லம்மாவைப் பற்றி அவளுக்கு தெரியேல்லைப் போல கிடக்கு.''

''அது தானே...''

''அவள் வாய்ச்காரி மாத்திரமல்ல. சரியான விசயகாரி. முகத்தை உம்மென்று வைச்சிருந்தாலும் அந்தப் பொன்னுத்துரை மாஸ்டரை ஒரு மாதிரி நெடுக வரப்பண்ணி கதைக்கப்பார்த்தாள். நான் விடேல்லை. இப்ப கொஞ்ச நாளாய் எங்கடை பொன்னம்பலத்தாரில அவளுக்கு ஒரு கண் போல கிடக்கு'' என்று தங்கலட்சுமி சொல்ல செல்லம்மா உஷாரானாள்.

பொன்னம்பலத்தின் விசயம் தங்கலட்சுமிக்கு தெரிந்துவிட்டதோ என்றுகூட ஒரு கணம் நினைத்தாள்.

''பொன்னம்பலத்தார் காலமையில கோயிலடிக்கு வாற நேரத்தில இவளும் கோயிலடிக்கு போய் அவருக்கு முன்னால் நின்றுகும்பிட தொடங்கிவிட்டாள். அன்றைக்கு சாரதா கண்டு சொன்ன பிறகு தான் விசயம் விளங்கிச்சுது'' என்று மேலும் சொன்னாள் தங்கலட்சுமி.

அதன் பின்னர்தான் செல்லம்மா சுயநிலைக்கு வந்தாள். தான் எதிர்பார்த்ததுக்கு மாறாக நடந்துள்ளது. நல்ல வேளை பொன்னம்பலத்தின் மேல் பழி விழவில்லை எனவும் அவள் நினைத்தாள்.

''அப்ப வசந்தமலரால் உனக்கு பிரச்னைதான்'' என்றாள் ஒருத்தி.—

''பிரச்சனையோ என்று பாவம் பார்த்து எங்களோடை இருக்கவிட்டால் அவளுக்கு நினைவு மாறிப்போச்சு—''என தங்கலட்சுமி சொன்னாள்.

''பாரன் புருஷன் செத்துப் போய் கொஞ்சக் காலம்தான். அதற்கிடையில எத்தனை பேரை மடக்கப் பார்த்திட்டாள்''

''அவள் முந்தியே வீட்டை விட்டு அவனோடை கூட்டிக் கொண்டு ஓடிவந்தவள் தானே பின்னை எப்படி இருப்பாள்''

''இப்ப தன்னும். அவள் யாரோடையாவது ஓடினாலும் ஆச்சரியமில்லை—''

''என்ரை பெட்டையளும் இருக்குதுகள் தானே. அதுகளை தட்டிக்கொண்டு எத்தனை ஆம்பிள்ளையள் நிற்கிறான்கள். இன்னும் நாலைந்து பெட்டையளை பெத்திருக்கலாம் என்று கூட நான் நினைக்கிறனான்—''

''மெய்தான் உன்ரை பெட்டையளின்ரை வடிவுக்கும், குணத்துக்கும்— இஞ்சை யார் இருக்கினம்—''

''அதுசரி பொன்னம்பலத்திற்கு அவள் வலைவிரிக்கிறதை நீ ஏன் இவ்வளவு நாளும் சொல்லேல்லை—''

''என்ன செய்யிறது எனக்கும் இப்பதானே தெரியும்'?

''புவனசுந்கரி உதை அறிந்தால் அமளியாக போயிடுமே. அவளுக்கு இன்னமும் தெரியாது போலகிடக்கு—''

''இனி அவளை என்ன செய்யப் போறாய்—''

''என்ன செய்யிறது. பாவப்பட்டு கூட்டிக்கொண்டு வந்தாச்சு. இடையில கலைக்க எனக்கு மனம் வரேல்லை என்ன நடக்கப் போகுதென்று பார்ப்பம்''

''எனக்கென்னவோ உப்பிடியான கேடுகெட்ட ஜன்மங்களை வீடு வாசலில் வைத்திருக்கிறதும் பெரிய மானக்கேடு என்று தான் நினைக்கிறன்.''

அன்றைய அவர்களது பேச்சில் வசந்தமலர் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தாள். இனி அந்த ஊர் முழுக்கப் பேசுகின்ற பேச்சிலும் வசந்தமலர் முக்கிய இடத்தைப் பெறுவாள் என்பது உறுதி.

★

தற்கொலை செய்யும் எண்ணத்துடன் அந்தக் கிணற்றடியில் வந்தமர்ந்திருந்த கந்தையருக்குத் தன்னுடைய மகன் பொன்னம்பலமும், செல்லம்மாவும் கதைத்தது தெளிவாகக் கேட்டது. அவர்களது பேச்சின் தொடக்கம் முடிவு பற்றி அவருக்குத் தெரியாவிட்டாலும் கதைத்த விடயத்தை ஒருவாறு ஊகித்துக்கொண்டார்.

பொன்னம்பவம் இவ்வளவு தூரம் முன்னேறிவிட்டானா? என்று அவரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. சாவைத் தேடிவந்த அவருக்கு இப்போது புதிய தலையிடி உருவானது.

வசந்தமலர் கோயிலுக்குப் போகின்ற நேரத்தில் பொன்னம்பலமும் போயிருக்கின்றான், அதையே மாற்றிப் பொன்னம்பலத்துக்கு வசந்தமலர் வலைவிரிக்கின்றாள் என்று தங்கலட்கமி நினைக்கிறாள் என்பதைக் கந்தையரால் உணரமுடிந்தது.

(8ம் பக்கம் பார்க்க)

'இருள் இரவில் அல்ல. தொடர் நவீனம் பற்றி ஒரு வாசக அன்பர் எழுதுகிறார்:

அன்றோ இன்றோ ஆளை அறியேன். நவீனம் நாகரிகமானது. காலத்தை வெளிப்படுத்தும் கற்பனை வைட்புக்கள். ''முன்பக்கப் பொத்தான் மூன்று பூட்ட மறதி வசந்தமலர் அகைக்கண்டு வருந்த நியதி.'' அநாசரிக நங்கையர்க்கோர் ஆப்பு அன்னவர்தம் அன்னையர்க்கு ஞான வார்ப்பு நவீனம் ஓர் நல்ல சாட்டை நாட்டுக்கும் வீட்டுக்கும் தகுந்த கோட்டை.

திருவாளரின் ஆற்றலையும், ஆயுளையும், அருமையான பேனாவையும் ஆண்டாண்டாக ஆண்டவன் காப்பாராக.

'சந்திரிகை'

# யோகியை மறக்கலாமோ?

ஆறுமுக நாவலரும் அவர்பின் முகை
ஐயாபண் டிதமணியும் வாழ்ந்த வண்ணம்
நீறுமரு ளைந்தெழுத்தும் ‹ மிழும் வாழ
நீடுபிர மச்சரிய நெறியில் வாழ்ந்த
வீறுடைய தவயோகி கார்த்தி கேசு
மேதினிவாழ் வொழிந்ததறிந் ததிர்ச்சி யுற்றோம்
வேறினியார் அவரிடத்தை நிரப்பு வாரோ
வித்தகரிங் கவரொப்பார் ஒருவர் உண்டோ?

கந்தரநு பூதிநிலை கைவந் தின்பக்
கந்தரநு பூதியுரை வரைந்த தன்றிக்
கந்தபுரா ணத்துரையும் வரைந்து காசி
கண்டமருட் பெரியபுரா ணம்போல் இன்னும்
நந்துசிவ புராணங்கள் பலவும் வல்ல
ஞானவுரை யாசிரிய ராகி வாக்குச்
சிந்தைசெயல் சிவமயமாய் மிளிர்ந்த யோகி
ஸ்ரீகார்த்தி கேசுவைநாம் மறக்க லாமோ?

பள்ளியிலே மூன்றாண்டே படித்தார்; நோய்கள்
பாதிக்கப் பருளாயில் சாந்தை என்று
விள்ளுஞ்சம் பே ச்சுரத்தில் தவமும் யோக
விரதமும்பூண் டிறையருளால் அனைத்தும் கற்றுத்
தெள்ளியசிந் தையராகித் தெய்வக் கோலந்
திகழளங்கள் மத்தியிலே வாழ்ந்த ஞானி
வள்ளல்நட ராசர்திரு வடியைச் சேர்ந்து
மாயாப்பே ரின்பமெய்தி நாளும் வாழ்க.

பண்ணாகம் பண்டிதர் அ. ஆறுமுகம்

# கடலும் அலையும்

# உயர்ந்த உறவுகளுக்கு உயிராவது நன்றி

வட்டூர்
எம்.என். கடம்பேசுவரன்

உயர்ந்த நட்பை ஏற்படுத்துவதற்கு அறிவு, அநுபவம், பெரியோர்துணை, சருத்தொருமைப்பாடு முதலியன வேண்டியிருக்கிறதென்பதும், தன்னையும் — சூழலையும் உணர்ந்து அறிவாற்பாகுபடுத்த முடியாத இளமைப்பருவம், நட்புக் கொள்வதற்கு உரியகாலமில்லை என்பதும், முன்னைய கட்டுரைகளாற் தெளிந்தோம். எனினும்; இளமை உறவுகள் சிலரது வாழ்நாள் வரை அருமையாகத் தொடர்ந்து, நல்ல நட்பாக மலர்தலும் உண்டு

தேராத இளமையுறவுகள், விலக்கமுடியாத தொடர்பாகி இறுக்கமடைந்து விடுவதாற் பெரும்பாலும் கெடுதலைச் செய்வனவாயும் விட்டுவிட முடியாதனவாயும் இருக்கின்றன. இதனால் இளமையுறவுகளை வரவேற்க முடியாதனவாயுள்ளன.

கெடுதல்களை எவரும் விரும்புவதில்லை ஆதலாற் தற்பாது காப்புக் கருதியும் தன்நிலையை உயரச் செய்யக்கருதியும் தீய நட்புகளை விலக்கவேண்டியுள்ளது. நல்ல நட்பை அடைவதற்கு எவ்வளவு விழிப்பு வேண்டுமோ அதைவிடத் தீய நட்பை நீக்குவதற்கு மிகுந்த அவதானமும் விழிப்பும்வேண்டும். தீயநட்பானது, நட்பு உள்ளபோதும்-பிரிந்தபோதும் தீங்குதரவல்லது. இதனாலேயே மிகுந்த தேர்வு வேண்டியுள்ளது. ஒரு பொருளை இழந்தென்றாலும், உன்னால் இழக்கமுடியாத தொன்றை நீ இழந்துவிட நேர்ந்தாலும் பரவாயில்லை. அறியாமற் செய்த தீய நட்பை விரைந்து விட்டுவிடு என்று விதி செய்கின்றார் வள்ளுவர்.

''மருவுக மாசு அற்றார்
கேண்மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.''

நட்பு வளர்ந்து இறுகியபின் ஒப்பில்லாதது எனக் கண்டு நீக்குவதிலும் பார்க்க இளமைக்கால உறவுகளைத் தவிர்க்கலாமல்லவா! இளமைக்கால நட்புகளைத் தவிர்த்தலால் நட்புக்காக, அன்புக்காக, உறவுக்காக பிறரைத் திருப்திப்படுத்துவதற்காக என்று செலவு செய்யும் நேரம், தன்னை வளர்க்கப் பயன்படுமன்றோ! ஒருவன் தன்னை வளர்ப்பது தன் இளமைக்கால அறிவுத் தேட்டத்திலாற்றான். நல்ல பண்புகளை வளர்த்தற்குரிய இந்தப் பருவம் இளமையறிவு என்பன நல்ல பண்புகளை மேலோங்கச் செய்யும். உன்னை நீ வளர்த்துக்கொண்டால் உலகம் உன் பின்னே வரும் என்று ஒவ்வொரு உள்ளமும் உணர வேண்டும். உணர்வதால் தன் கருமங்களைத் திட்டமிட்டுச் செய்யும் இயல்பூக்கம் ஏற்படும். நேரம் வீண்விரயமாவது தவிர்க்கப்படும்.

அனுபவ முதிர்ச்சியோ, அறிவுமுதிர்ச்சியோ இல்லாத இப்பருவத்தில் தனக்கு நல்வழி காட்டும் உண்மையறிவுமிக்க விசுவாசமான அன்புகொண்ட பெரியோர் துணையே இருத்தல்வேண்டும். அவர் வழிபட்டு வழிகாட்டலோடு உறவுகளைத் தேடி ஓய்வான நேரத்தைச் செலவு செய்யலாமே தவிர அர்த்தமற்ற முறையில் நேரத்தைச் செலவு செய்தல் பொருத்தமற்றது என்பதே இங்கு கருதத்தக்கது.

விதைகள் நல்லினத்தைச் சேர்ந்ததென்பதாலும் நல்ல தரமானவை என்பதாலும் முளைப்பதில்லை நல்ல பாத்தியுள் (நாற்றங்காலைச்) சேர வேண்டும். சேராத விதையாற் பயனில்லை மேலும் விதை தன் கருவைப் பாதுகாக்கக் கருதி கடினமான ஓட்டையும் நாற்றங்காலை அடைவதற்குரிய [கனி, புறத்தோல் முதலிய] வழிமுறைகளையும் கொண்டிருக்கிறது நாற்றங்காலையடைந்தபோது ஓடு இளகுகின்றது. கரு முளைத்தெழு

(8-ம் பக்கம் பார்க்க)

# முதலுதவி அறிவு இன்று அவசியம்

நூல்: 'குடும்ப முதலுதவி'
நூலாசிரியர்: டாக்டர் க. சுகுமார் எம். பி. பி. எஸ்.
வெளியீட்டாளர்: கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி.
விலை: ரூபா 24-50

எமது நாட்டில் ஏற்படுகின்ற பல மரணங்களை, முறையான முதலுதவியைச் சரியான தருணத்தில் கொடுப்பதன் மூலம் தடுக்கமுடியும். ஆயினும் முதலுதவி பற்றிய போதிய அறிவு இல்லாமையால் பல சந்தர்ப்பங்களில் முதலுதவி கிடைக்காமலோ அன்றிச் சரியான முறையில் கிடைக்காமலோ போய்விடுகிறது.

ஆயினும் அண்மைக் காலத்தில், காலத்தின் தேவையை ஒட்டி—திடீர், திடீரென, எதிர்பாராதவிதங்களில் ஏற்படும் விபத்துக்கள், காயங்கள் காரணமாகவும், போக்குவரத்துச் சேவைகள் மோசமாகச் சீர்குலைந்திருப்பதினாலும்—முதலுதவி மீது ஒரு திடீர் 'மோகம்' ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

**டாக்டர் எம். கே. முருகானந்தன்**
எம். பி. பி. எஸ்.

ஆனால் முதலுதவி பற்றிய பூரண அறிவு இன்றைய காலகட்டத்திற்கு மாத்திரமின்றி எக்காலத்திற்கும் மிகவும் அவசியமானது ஏனென்றால் முதலுதவி என்பது காயங்களுக்குக் கட்டுப்போடுவதும், இரத்தப் போக்கினைக்கட்டுப்படுத்துவதும் தான் என்ற எண்ணம் தவறானது. எந்தவித திடீர் அல்லது அவசர நோய்களுக்கும் பொதுமக்கள் எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும், எவ்வாறு செயற்படவேண்டும் என்பதையும் அறிவுறுத்துவதே முதலுதவி.

அண்மைக் காலத்தில் முதலுதவி பற்றிய ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டதும், அதைத் தொடர்ந்து முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் பல்வேறு மட்டங்களிலும், பரவலாக நடாத்தப்பட்டதும் நாம் அறிந்ததே.

ஆயினும் இப்பயிற்சி வகுப்புகளின்போது முதலுதவி பற்றிய விரிவான பாடநூல் எதுவும் தமிழில் இல்லாதது பெருங்குறையாக உணரப்பட்டது. இதனை மனதிற்கொண்டு போலும், நூலாசிரியர் மிக விரிவானதும், பூரணத்துவமானதும் ஆன முதலுதவி நூலாக இதை ஆக்கியுள்ளார்.

மனித உடற்கூறு பற்றியும், அவற்றின் தொழிற்பாடு பற்றியும் தெளிவான அடிப்படை அறிவு இல்லாமல், விஞ்ஞான பூர்வமாக முதலுதவி செய்ய முடியாது என்பதைக்கருத்திற் கொண்டு உடலின் கட்டமைப்பு, தொழிற்பாடு பற்றிய ஒரு சுருக்கமான அத்தியாயம் நூலின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது,

''நஞ்சு அருந்தல், குருதிப் பெருக்கு, அதிர்ச்சி, மயக்கம், எரிகாயங்கள், ஏனைய காயங்கள், எலும்பு முறிவு போன்ற முக்கிய அவசர நிலைகள் பற்றியும், அவற்றிற்கான முதலுதவி வழிமுறைகள் பற்றியும் விரிவாகத் தனித்தனி அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

இவற்றை இலகுவாக விளங்கிக்கொள்வதற்கு ஏதுவாக ஏராளமான விளக்கப்படங்கள், தேவையான இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. சிறப்பாகச் சிந்தனையைக் கவரும் வண்ணம் தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியங்களைப் பிரபல ஓவியர் ரமணியும், இளம் ஓவியர் லலித்குமாரும் படைத்திருக்கிறார்கள்.

சில விஷயங்கள் எமது நாட்டுச் சூழலுக்குப் பிரத்தியேகமானவை, வேறு சில விடயங்கள் எமது நாட்டு மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. பாம்புக்கடி, நஞ்சருந்தல், வயிற்றோட்டம் போன்றவற்றை இப்பிரிவில் குறிப்பிடலாம். இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து விரிவாகவும் நுணுக்கமாகவும் எழுதப்பட்டிருப்பதினால், எமது மக்களுக்கு இந்நூல் மிகவும் பிரயோசனமாகவிருக்கும்.

மேலும் எமக்கு அன்றாடம் ஏற்படும் பல பொதுவான சில்லறைப் பிரச்சினைகளுக்கு உதாரணமாக விக்கல், காதுவலி, பல்வலி, காதுக்குள் அல்லது மூக்கிற்குள் பூச்சி அல்லது வேறு அந்நியப் பொருள்கள் உட்புகல் போன்றவற்றிற்கு—உடனடியாக என்ன செய்யலாம் எனத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால், இந்நூலைப் பயன்படுத்தி, அவற்றிற்கு உடனடி நிவாரணம் பெறக்கூடியதாக இருக்கும்.

சில இக்கட்டான சூழ்நிலைகளில்—உதாரணமாக அவசியத்திற்குக் கார் பிடிக்க முடியாமலோ அல்லது சூழ்நிலையின் பயங்கரம் காரணமாக வீட்டைவிட்டு வெளியே செல்வது ஆபத்தாக இருக்கும் நேரங்களில்—பல பிரசவங்கள் வீட்டிலேயே நடைபெற்றுவிடுவதை நாம் அவதானிக்கிறோம். இந்நேரங்களில் பயிற்சி பெற்ற மருத்துவிச்சியின் உதவியைக்கூட பலசந்தர்ப்பங்களில் பெறமுடியாதிருக்கக் கூடும். இந்த வேளைகளில், ஆபத்திற்குக் கைகொடுக்கக் கூடிய வகையில் அவசரவேளைகளில் பிரசவம் என்ற அத்தியாயம் சேர்க்கப்பட்டிருப்பது பொருத்தமாயிருக்கிறது.

அத்தியாயங்கள் முடிவடையும்போது, சிறிதளவு இடம் மிச்சப்படுவதுண்டு. இப்படி மிச்சப்படும் இடங்களை வீணாக்காது, அங்கே—உணவுமுறை, தடுப்பூசி போடுதல், தொழுநோய், ரி. பி. வீ, டி. ரத்த சோகை, கண்பாதுகாப்பு, பற்பாதுகாப்பு, கருச்சிதைவு, மது அருந்துதல், தற்கொலை முயற்சி போன்ற பல விடயங்கள் பற்றிய மருத்துவக் குறிப்புகள் தரப்பட்டிருப்பது பிரயோசனமானதும் பாராட்டுக்குரியதுமான ஒரு முன்னோடி முயற்சியாகும்.

பொதுவாகச் சொல்லப் போனால், இந்நூல் ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாக இருக்கவேண்டியது, ஏனெனில் ஒரு உசாத்துணை நூல் போல், மருத்துவ அவசியங்களுக்குத் தட்டிப்பார்த்து உடனடியாகப் பயன்பெறக் கூடியது.

திருமண வைபவங்களின் போதோ, பிறந்தநாள் வைபவங்களின் போதோ, நண்பர்களுக்குப் பரிசளிப்பதற்கும், இன்றைய சூழ்நிலையில் மிகவும் பொருத்தமானதாக இந்நூல் விளங்குகிறது.

## தொடர் நவீனம்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

வசந்தமலரைத் தங்கலட்சுமி சொல்லுவது போலக் கூடாதவள் என்று அவரால் நினைக்க முடியவில்லை. அதே நேரம் செல்லம்மாவும் ஏனையவர்களும் சேர்ந்து அவளை ஊர் முழுக்க மானம் கெடுத்துவிடுவார்கள். அதன் விளைவை வசந்தமலரால் தாங்கமுடியுமா?

தங்கலட்சுமி வீட்டுக்கு வசந்தமலர் போகக் காரணமாக இருந்தவன் நான்தானே அவளை இந்தப் பிரச்னைகளில் இருந்து விடுபடவும் உதவி செய்யவேண்டியதும் என் கடமைதான் என அவர் மனம் கூறியது.

அதன் காரணமாக அவர் தங்கலட்சுமி தன்னுடன் கதைத்தபோது நினைத்த விடயத்தைச் செயல்படுத்த விரும்பினார். அதனால் தனது தற்கொலை முயற்சியை அப்போதைக்குக் கைவிட்டார்.

வயதான காலத்தில் மனைவியை இழந்து தான்படும் துன்பம்போல இளமைக் காலத்தில் புருஷனை இழந்து வசந்தமலர் கஷ்டப்படக் கூடாது என அவர் முன்பு விரும்பினார். அவர் நினைத்ததற்கு மாறாக வசந்தமலருக்குத் தொடர்ச்சியான பிரச்னைகள் ஆரம்பித்துவிட்டன.

[தொடரும்]

## உள்ளூர். .

(6ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு முன்பு நிகழ்ந்தது. நியூயோர்க் துறைமுகம் தொடக்கம் பசுபிக் கடலோரம் இருக்கும் கலிபோர்ணியா வரை அமெரிக்க மக்கள் 4152 மைல்கள் கைகோர்த்து நின்று நிதி சேகரித்தார்கள். றீகனும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். எதியோப்பியாவில் பஞ்சம், சிம்பாவேயில் வரட்சி, இவற்றில் எல்லாம் மக்கள் மடிந்தபடியே இருக்கிறார்கள். இனப்பிரச்னையால் நாளுக்கு நாள் மடியும் மக்கள் எவ்வளவு? இவற்றுக்காக உலக மக்கள் அலாஸ்கா தொடங்கி விளாடிவஸ்ரொக் வரை கைகோர்க்கும் நாள் எந்நாளோ? கோதுமையைக் கடலில் கொட்டியும், குண்டுகளைக் குழந்தைகள் தலையில் கொட்டியும் சண்டித்தனம் 'விடும்' அமெரிக்க நாடு இனியாவது அமெரிக்காவுக்கு வெளியே நிதானமாகச் சிந்திக்குமா?

★

### நாமார்க்கும் குடியல்லோம்

தத்துவச் சிந்தனையாளன் பேட்ரன் ரஸ்ஸலின் நினைவு தினம் மே மாதம் 18-ம் திகதி வந்து முடிந்துவிட்டது. பத்திரிகைகள் எல்லாம் அவரைப் பற்றியே எழுதித் தள்ளின. நாமும் சில சொல்லி வைப்போம். பேட்ரன் ரஸ்ஸலின் பாட்டனார் ஒரு மனிதாபிமானவாதி. சென்ட்ஹெலினா தீவிலே தன்னந்தனியனாக வாடிய நெப்போலியனை அத்தீவிற்குச் சென்று சந்தித்தவர் அவர். காசில்றீ என்ற பிரித்தானியத் தேசாதிபதியின் உத்தரவிற்கு அமைய நெப்போலியனின் தலைமயிர்கள் ஒவ்வொன்றாகப் பிடுங்கி எறியப்பட்டன. உலகை உலுக்கிய சக்கரவர்த்தியின் நிலை கண்டு அவர் க்ண்ணீர் விட்டார்.

ஆற்றங்கரையில் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ'' என்ற கூற்றையே இது ஞாபகப்படுத்தியது.

பேட்ரன் ரஸ்ஸலின் பாட்டனார் சென்ட் கெலினா தீவிற்குச் சென்று நெப்போலியனுக்கு ஆறுதல் சொன்னார். எதிரிகளையும் அங்கு மனிதாபிமானிகள் மனிதர்களாகவே கணித்தனர்.

இன்று பூஸாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களைச் சந்திக்க தெற்கே எந்த மனிதாபிமானி ஆயத்தம்? கடவுளுக்கே வெளிச்சம்?

## ஆலம் விழுது

ஊனப் பிறவி உள்ளவரை
உரிமை யோடு நாம்மீண்டும்
தொடங்கும் வாழ்க்கை
என்னுச்சு
தொடர்கதை போலே
வந்தாச்சு

கொல்லைப் புறத்து ஆலமரம்
காற்றே அடித்துச் சாய்ந்
தாலும்
இல்லை அதன் வம்சமெனும்
சொல்லை நம்ப வேண்டாமே
பிள்ளை யான விழுதுமே
பின்பு மரமாய் வளருமே.

—வ. யோகானந்தசிவம்

## ஆரம்பக் கல்வி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தோடு கல்வி கற்பதற்குப் பல்வேறு ஊக்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பக் கல்வி நிலையில் அன்னை மொழிக் கல்வி, இலவசக்கல்வி, எல்லோர்க்குங் கல்வி என்ற கல்விக் கோட்பாடுகள் போர்த்துக்கேயர் காலத்தில் நடைமுறையில் இருந்தமையினால், போர்த்துக்கேயரின் கல்வி முறை இலங்கையில் நல்ல வரவேற்பைப்பெற்றது.

கற்பித்தல் முறைகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்வியில் விருப்பத்தை ஏற்படுத்துவதற்கும், பாடசாலைகளில் இன்பகரமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் இசை, நாடகம் என்பன பயனபடுத்தப்பட்டன.

கல்வி கற்பித்தல் முறைகளில் கவர்ச்சி, மகிழ்ச்சிகரமான சூழ்நிலை, கட்புல—செவிப்புல சாதனங்கள், இலகு அணுகுமுறை என்பனவற்றின் தொடக்கக் கருக்கள் இக்காலப்பிரிவில் தோன்றியுள்ளன.

மனனம் அல்லது நெட்டுரு செய்யும் கலை இந்நாட்டில் தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்துள்ளது. எனவே இளஞ்சிறார்களுக்கு நெட்டுரு முறையில் கல்வியை அளிப்பதில் மிசனரிமாருக்குச் சிரமம் இருக்கவில்லை. எழுத்துக்களை வாசிக்க அறிந்திராதவர்களும் வேதசார வினாவிடையை கேள்வி மூலம் மனனஞ்செய்து ஒப்புவிக்கக்கூடிய ஆற்றல்களைக் கொண்டிருந்தமையைக் கண்டு மிஷனரிமார்கள் வியப்படைந்துள்ளனர்.

போர்த்துக்கேயரின் கல்வி முறைகள், கல்விச் சிந்தனைகள் செயற்பாடுகள் ஆகியவற்றில் பல இந்நாட்டின் கல்வி வரலாற்றில் திருப்பங்களையும், முன்னேற்றங்களையும் ஏற்படுத்தின என்பதை மறுக்கமுடியாது. அத்துடன் பின்னைய காலங்களில் இங்கு ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தங்களுக்கு இவை உந்துசக்தியைத் தரவல்ல சிறப்பியல்புகளைக் கொண்டிருந்தன எள்பதையும் மறைக்கமுடியாது. மரபுவழிப் பண்பாட்டுவளர்ச்சியை முடங்கச் செய்தமை, தேசிய உணர்வை மழுங்கச் செய்தமை, அடிமைச் சிந்தனையை வளர்த்தமை ஆகியவற்றிற்கு கல்வி உடன்பாடாக அமைந்தமை இக்காலப் பகுதிக் கல்வி வரலாற்றின் இருண்ட பாகம் ஆகும். தொடரும்)

## உயர்ந்த

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றது. இதுபோன்று மனித உயிராகிய விதை நட்பாகிய நாற்றங்காலைச் சேரும்போது ஒடுபோன்ற உள்ளம் நெகிழ்ந்து வாழ்வாகிய கருவை முளைத்தெழச் செய்கின்றது.

உறவுகளில் உயர்ந்தது நட்புறவு. இவ்வுறவுக்கு உயிரூட்டம் தருவது நன்றியுணர்வு. நன்றி பாராட்டும் பண்பு இல்லாதவரைச் சேரக்கூடாது. நன்றியுணர்வுள்ளவன்- செய்நன்றி பராட்டுபவன் மற்றெல்லாப் பண்புகளும் கைவரப் பெறுவான்.

நன்றியுணர்வானது வாழும் காலம்வரை உயிரோடு ஒன்றுபடவல்லது. ஒன்றுபடவேண்டியதுமாகும். இந்நன்றியுணர்வு பிரதியுபகாரத்தோடு முடிந்துவிடுவதல்ல. அவன் உதவி செய்தான். பதிலாகப் பல உதவிகளைச் செய்துள்ளேன் என் கடமை தீர்ந்தது எனப்பலர் கூறுவதைக் கேட்கிறோம். இவ்வாறு என் கடமை தீர்ந்தது என்றிருக்கவிடாத உணர்வே நன்றியுணர்வு.

உதட்டளவில் 'நன்றி' எனச் சொல்லுபவன் அந்தக்கணமே மறந்துவிடுதல் கூடுமாதலால் உள்ளம் பொருந்திய நன்றியுணர்வு எவ்வாறு வெளிப்படுகின்றதென்பதனையும், ஒருவர் செய்யும் நன்றியால் பெறப்படும் பயனையுணர்ந்தவன் எங்ஙனம் அதனைத்தன் வாழ்நாளில் மறத்தல்கூடும் என்பதனையும் இனிக்காண்போம்.

## விரைந்து வா

கல் மழை பொழிந்த போது
கோவர்த்தன கிரியைக்
குடையாகப் பிடித்துக்
காத்து நின்ற
கண்ணனே—
இன்று பொழிவது
கல்-மழை அல்ல — கண்ணா
''ஷெல்'' மழை!
அதற்குக்—
கோவர்த்தன கிரி கூடத்
தாங்காது என்று
எம்மைக் காக்க
இன்னும் நீவரவில்லை?
ஏற்ற குடையினை
எடுத்தெமைக்காக்க
விரைந்து வருவாய் கண்ணா!

ப. மகேந்திரதாசன்

## ஆர்ஜன்ரீனா...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை நடைபெற்ற இறுதியாட்டத்தின் பிற்பகுதியில் மே ஜேர்மனி மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய போதும், பின்னணி வீரர்களின் கவலையீனத்தாலேயே தோல்வியடைந்தது. 1982-ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற இறுதியாட்டத்திலும் கோல்காப்பு வீரர் சூமாக்கரின் கவலையீனத்தாலேயே மே. ஜேர்மனி தோல்வியடைந்தது.

### டியாகோ – மறடோனா

ஆர்ஜன்ரீனா கோஷ்டியின் காப்டன் டியாகோ மறடோனாவின் சிறந்த ஆட்டமே இவர்களின் வெற்றிக்கு வழிவகுத்தது என்பதை யாருமே மறுக்க முடியாது.

1982ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற ''உலகக் கிண்ணப்'' போட்டியில் இவர் பெற்ற இழப்புகளை, இப்முறை ஈடுசெய்து கொண்டார். 1982ம் ஆண்டுப்போட்டிகளில் மைதானத்திலிருந்து, முறை தவறி விளையாடிய குற்றத்துக்காக மத்தியஸ்தரால் வெளியேற்றப்பட்ட ஒரே ஒரு வீரர் என்றால், அது டியாகோ மறடோனாதான்.

இம்முறை இவரின் ஆட்டத்தில், அமைதியுடன் கூடிய வேகம், மதிநுட்பம், சகிப்புத் தன்மை யாவும் ஒன்றுகூடி இருந்தமையால் புகழ் ஏணியில் ஏறமுடிந்தது. டியாகோ மறடோனாதான், இம்முறை ''உலகக் கிண்ணப்'' போட்டியில் மிகக்கூடிய கோல்களை அடித்துச்சாதனையும் புரிந்தார்.

இதனால். இவரின் நாட்டின் பலவிளையாட்டரங்குகளில் இவரைக் கௌரவிக்கும் முகமாக ஞாபக ஸ்தூபிகளை கட்ட ஆரம்பித்துவிட்டார்கள்; பல நாடுகள் இவருக்கு பிரஜா உரிமை கொடுக்க முன்வந்துள்ளன.

இதுவரை நடைபெற்ற 13 ''உலகக் கிண்ணப்'' போட்டிகளிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளும், ஐரோப்பிய நாடுகளுமே வெற்றிபெற்றுள்ளன.

லத்தீன் அமெரிக்க நாடுகள் 7 தடவைகளும், ஐரோப்பிய நாடுகள் 6 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன.

### மெக்ஸிக்கோவுக்கு நன்றி

1986ம் ஆண்டுப் போட்டியை தன் நாட்டில் நடாத்துவதற்கு முன்பு சம்மதம் தெரிவித்த ''லாஸ் ஏஞ்சல்ஸ்'' பின்பு அப்பொறுப்பிலிருந்து ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி மெதுவாக நழுவிவிட்டது. இதன்பின்பு, இம்மாபெரும் பொறுப்பை, 2வது முறையாக கைஏற்று, எதுவித அசம்பாவிதங்களும் நிகழாமல், இப்போட்டியை மிகச் சிறப்பாகச் செய்துமுடித்து பாராட்டுப்பெற்ற, மெக்ஸிக்கோ நாட்டுக்கு எமது பாராட்டுக்கள்.

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம்: ஆனி
திகதி: 22 (1986-07-6)
கிழமை: ஞாயிறு
திதி: சதுர்த்தசி அற்று அமாவாசை
நக்ஷத்திரம்: மிருகசீரிடம் அற்று திருவாதிரை

### மேடம்

பொன்னான சந்தர்ப்பம் ஒன்று உங்களை பூரிப்படையச் செய்யும். நீண்ட நாள் கோரிக்கையும் இன்று நிறைவேறலாம் குடும்பத்திலும் நன்மையான விடயங்கள் இடம் பெறலாம். கடமையிலும் புதுத் திறமை பிறக்கும் இன பந்தங்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். சுமாரான தினம்.

### இடபம்

தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். தாம்பத்திய வாழ்விலும் பூசல்கள் தோன்றலாம் உஷ்ண ரோகத்திற்கும் இடமுண்டு வீணான சிந்தனைக்கு இடமளியாதிருக்கவும். எவ் விடயத்திலும் பொறுமை நன்று.

### மிதுனம்

பகை மூட்டம் வட்டமிடும். எண்ணங்கள் பல அலை மோதும். திடீர்ப் பயணங்களைத் தவிர்க்குதல் நன்று. புதுமையான சிந்தனைகளும் மனதுக்கு வேதனையைத் தரலாம். தொழில் துறையிலும் அவதானத்துடன் இருக்கவும். அடக்கம் விரும்பத்தக்கது.

### கடகம்

கன்னியர் காதல் வலை பின்னுவர். குடும்ப வழியால் மகிழ்ச்சிக்குமிடமுண்டு. வாகனம் செலுத்துவோர் விருத்தி பெறுவர். சிலர் வாழ்க்கையில் தலைமைப் பீடமும் பெறுவர் வாக்கு வன்மையாலும் காரியத்தைச் சாதிப்பீர்கள்கள் குதூகலமான தினம்.

### சிங்கம்

மித்துருக்கள் சத்துருக்களாக மாற நேரிடும். எவ்விடயத்தையும் சிந்தித்துச் செயலாற்றவும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காகுவீர்கள். எதிலும் ஆத்திரத்தைத் தவிர்க்கவும். சகோதர பேதமும் தோன்றலாம். பொறுமை நன்று.

### கன்னி

தாய்வழிப் பெருமை மகிழ்ச்சியைத் தரும். இடமாற்றத்திற்கும் வழிகோலப்படலாம். எதிலும் அதிக உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். புதிய வாகனமும் கொள்வனவு செய்யப்படலாம். வாழ்க்கையிலும் நன்மதிப்புப் பெறுவீர். சுறுசுறுப்பான தினம்.

(11ம் பக்கம் பார்க்க)

## மாகாண

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் தொடர்ச்சியான இராணுவக் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிற அதேநேரம் தமிழ்த் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திப்பதேன்? இராணுவநடவடிக்கையை நிறுத்தவரும்முயல வில்லை தமிழ்மக்களின் பாதுகாவலர்களாக தம்மை பிரகடனப்படுத்தியவர்கள் இந்த மாகாணசபைகள்பற்றிப் பேச முன்வந்துள்ளார்களே?

எது எப்படியாயினும் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் தமிழ்மக்களின் பாதுகாவலர்கள். மாகாண சபைபற்றி பேச்சுவார்த்தை நடத்த இருப்பவர்கள் விழிப்பாக ருத்தல் வேண்டும். மாவட்ட அபிவிருத்திச் சபைகட்கு நடநத கதி மாகாண சபைகட்கும் நேர்வது தவிர்க்கப்பட வேண்டும்.

சுருங்கச் சொல்லின் மாகாணசபைத் திட்டத்தில் சுயநிர்ணயம் என்ற மீனைத் தூண்டில் போட்டுப் பிடித்தல் அரிது.

## நினைவில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உச்சப்பாதுகாப்பு மிகுந்த சிறைச்சாலை எனக் கருதப்பட்ட வெலிக்கடைச் சிறையில் பாதுகாப்புக் கைதிகளாக இருந்த 53 தமிழீழப் போராளிகள் சக கைதிகளாலேயே இரு வேறு நாட்களில் அதாவது ஜூலை 25 ம் திகதியும் 27 ம் திகதியும் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்களுள் தமக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனைக்கு எதிராக அப்பீல் செய்திருந்த தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் மூவரும் குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். டாக்டர் ராஜசுந்தரம் தலை பிளக்கப்பட்ட நிலையில் மரணமானார்.

டாக்டர் ச. அ. தருமலிங்கம் விரிவுரையாளர் நித்தி கோவை குண்டர்களுடன் போராடித் தப்பித்துக் கொண்டார்.

உச்சப் பாதுகாப்பு மிகுந்த சிறைச்சாலையான வெலிக்கடைச் சிறையில் தமிழ் பாதுகாப்புக் கைதிக்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் அவர்கள் மட்டுநகர் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்கள்.

சர்வதேச மன்னிப்புச் சபை ஜூரர்கள் சபை, மனித உரிமைகள் குழுக்கள் யாவும் சிறையில் நடைபெற்ற படுகொலைகளையிட்ட மரண விசாரணையை வலியுறுத்தி வந்துள்ள போதும் நாளது வரை செவிடன் காதில் ஊதப்பட்ட சங்காகவே அந்த வலியுறுத்தல் அமைந்து விட்டது 1986 ஜூலை இதுவும் தமிழர் வாழ்வில் ஒரு மைல் கல்லாக அமையுமா? ஜூலை 15 ந்திகதி தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கான அரசியல் கட்சிகளினது மகாநாட்டின் இரண்டாவது சுற்று நடைபெறவுள்ளது. அது தரப்போகின்ற சேதி என்ன.

1983 ஜூலைப் பிரளயத்தை நினைவு கூரும் முகமாக 'எதிர்ப்புத் தினம்' அனுஷ்டிக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்ற வேளையில் இந்த ஜூலையுடனாவது தமிழர் துயரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?


## பிரயாண ஒழுங்குகள்

✶ கனடா ✶ டென்மார்க்

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

மலேசியாவுக்கு உடனடியாக தொழிலாளர்கள் தேவைப்படுவதால் 08-07-1986 க்கு முன் பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.

MAN POWER
MULTI SERVICES
and Travel Consultant

533, Stanley Road, Jaffna.

[C-3290]

V. S. P. ஸ்பெசல் நல்லெண்ணெய்

பாவனையாளர்களுக்கோர்

## எச்சரிக்கை

எமது நிறுவனத்தின் விலாசமான V. S. P. அடையாள லேபிளைக் கொண்ட போலி நல்லெண்ணெய் விற்பனை பருத்தித்துறை, மந்திகை முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு பருத்தித்துறையைச் சேர்ந்த யோ. தேவசகாயம், பண்டத்தரிப்பைச் சேர்ந்த க. சண்முகசுத்தரம் ஆகியோரை விசாரணைக்குட்படுத்தி எச்சரித்துள்ளோம். மேற்படி மோசடிச்செயலை அம்பலப்படுத்த உதவிய எமது வாடிக்கையாளர்கட்கும் சமூக நலவிரும்பிகட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,

இவ்வித மோசடியால் துயரப்படும் எமது வாடிக்கையாளர்கட்கு ஆழ்ந்த மனவருத்ததைத் தெரிவித்து இவ்வித மோசடிகளை தவிர்க்கும் நோக்குடன்

வடமராட்சி வாழ் மக்களின் கூட்டுறவுச் சங்க கிளைகள் எல்லாவற்றிலும் எங்கள்

V. S. P. ஸ்பெசல் நல்லெண்ணெய்

கிடைக்க ஒழுங்குகள் செய்துள்ளோம்

என்பதை மிகமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# பரிமளா ஸ்ரோர்ஸ்

26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,

[C-3301]

## வெளிவந்து விட்டது!

சமூகக்கல்வி — ஆண்டு 9
(புதியபாடத்திட்டம்)
பொருளியல்
(இலங்கையின் சனத்தொகை)
ந. தர்மபாலன் B. A. (Hons.)
(சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்)
பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

53, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-3281)

## பிரயாண ஒழுங்கு

✶ கனடா ✶ டென்மார்க் ✶ பிரான்ஸ்
✶ மே. ஜேர்மனி, ✶ நெதர்லான்ட்
✶ ஈராக் ✶ சவூதி ✶ அவுஸ்திரேலியா.

எமது முகவர் 10/7, 15/7, 20/7, 30/7 திகதிகளில் உங்களைக் கூட்டிச்செல்லவுள்ளார்.

கொழும்பு - நோர்வே டிக்கட் ஏற்பாடுகளை இங்கிருந்தே செய்து தருகின்றோம்.

ரஜீவன் ட்ரவல்ஸ்,
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

## செனித்தின்
## முக்கிய அறிவித்தல்

தயவுசெய்து வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் கவனிக்க!

1. எம்மால் விநியோகிக்கப்படும் நெல்லிரசம் மற்றும் பொருட்கள் தரஆய்விற்கு பின்பே உங்கள் கைக்கு வந்தடைகின்றன.
2. எக்காரணங்கொண்டும் தரம் மாற்றப்படாதென்கின்ற உத்தரவாதத்தில் பாவனையாளர்களுக்கு விற்கப்படுகின்றது.
3. விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கு குறைந்தது 180 நாட்கள் முழு உத்தரவாதம் கொடுக்கப்படுகின்றது.

பாவனையாளருக்கு:

4. தயவுசெய்து தேவையற்ற குறைகளை எமது விற்பனை பிரதிநிதிகளுக்கு சுமத்தவேண்டாம். உங்கள் மனநிறைவே எங்கள் செல்வம். உங்களுக்கு மனநிறைவென்றால் மற்றவர்களுக்கும் சொல்லுங்கள் — அல்லது எங்களுக்குச் சொல்லுங்கள்.

ஆதரவிற்கு நன்றி!

ஜோ. எகட்டன்
(செனித்)
(A 770) யாழ். நகர்.


உ

## திருமண அழைப்பு

மணமகன்: ப. செல்வசேகரம்
(மக்கள் வங்கி பிரதேச காரியாலயம் யாழ்.)

மணமகள்: சு. புவனேஸ்வரி

காலம்: 13-07-1986.

நேரம்: 11-07 தொடக்கம் 12-04 வரை

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில்

வரவேற்புபசாரம்: 13-07-86 மாலை 4-30 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி
செ. பரராசசேகரசிங்கம்,
(மரணவிசாரணை அதிகாரி)
மாங்குளம்,

திருமதி
ம. சுப்பிரமணியம்,

திரு. திருமதி
வை. மகேந்திரன்,
11/4, பெந்தகோஸ் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

[C-3233]

## பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜெர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க்
கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]



## பிரயாண ஒழுங்குகள்
டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)
ஜூலை 7ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
[A 757



**NEEMIA**
**FERTILISER**



நீமியா உரம்
நிமியா பொஹொர
A MILKWHITE PRODUCT

## நீமியா உரம்

மண்ணை வளம்படுத்தி,
அதிக விளைவைத் தந்து,
பயிர்களைப் பாதுகாக்கும்.

மண்ணில் உள்ள கறையான் எறும்பு பூச்சிகளை அழித்துவிடுகிறது.

மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற விரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**மில்க்வைற் தொழிலகம்,**
த. பெ. 77, யாழ்ப்பாணம்.
[A-7 9]


## யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கிளைக்குழுத் தேர்தல்

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(பதிவு இல: யா. 1565
திகதி: 30-03-71)

நியமனப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி: 12-07-86 சனிக்கிழமை.

தேர்தல் திகதி: 20-07-86 ஞாயிற்றுக்கிழமை.

தேர்தல் நடவடிக்கை சம்பந்தமான விதிகளை உள்ளடக்கிய பிரசுரம் எமது சங்க எல்லாக்கிளைகளிலும் 01-07-86 முதல் அங்கத்தவர்கள் தகவலுக்காக பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றேன்.

காரியதரிசி.
A 907

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



எஸ். தர்மலிங்கம்

ஆண்டவன் படைப்பு:
22-07-1928

ஆழ்பவன் அழிப்பு:
06-06-1986

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எமக்கு உறுதுணையாக இருந்து திடீர் என எம்மை ஆழ்த்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எமது அன்புத்தந்தையின் மரண வைபவத்திற் கலந்து எங்கள் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்கள், உதவி, ஒத்தாசை புரிந்தவர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் எங்கள் தந்தையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 06-07-86 ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் தியாகராசா வீதியிலிருக்கும் இவரது மாமனாரின் இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டிக் கிரியையிற் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மருமகன்,
மக்கள்:
த. தனபாலசிங்கம்.
த. குணபாலசிங்கம் (சுழநாடு),
த. யோகராசா (சுழநாடு).
பேரப்பிள்ளைகள்.
தியாகராசா வீதி,
சண்டிலிப்பாய்.
A 908)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



## Manpower Marketing Services

உற்பத்தியாளர்களே!
உங்களது உற்பத்திப்பொருட்களை சிறந்த முறையில் எம் அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதிகள் மூலம் விற்பனை செய்வதற்கு உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
MARKETING MANAGER,
MAN POWER MARKETING SERVICES,
533, STANLEY ROAD, JAFFNA. [C-3289]



## பிரயாண ஒழுங்குகள்

கனடா டென்மார்க்
சவூதி அரேபியா

அ. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை அழைத்துச்செல்வார். செல்ல விரும்புவோர் யூலை 15-ம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

ஆ. டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்

இ. சவூதி அரேபியாவுக்கு (Labour) தொழிலாளர்கள் உடன் தேவை. செல்ல விரும்புவோர் 15-ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டுவந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக்கொள்ளவும்.

ஈ. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான பிரயாண சேவை (Colombo) கொழும்பிலிருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**N. BALA,**
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
குறிப்பு: (பஸ் வழி இல. 764 பலாலி வீதி,
கோண்டாவில் சந்திக்கு அருகாமை.)
(C 3250)



கருங்கேசத்துடன்
இளமைத் தோற்றத்திற்கு
பீகொக்
ஜப்பானில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட தரமான தயாரிப்பு




விலை ரூபா 45/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றுண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையானோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்டல்.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்

ஏக இறக்குமதியாளர்கள்:
ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்
25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860

## காணவில்லை

கொட்டடக்கலையைச் சேர்ந்த தங்கவேலு சரோஜா, லதா, ஆகிய 15 வயதிற்குட்பட்ட வீட்டு உதவியாளர்களான இரு பெண் பிள்ளைகளை 3-7-86 முதல் காணவில்லை இவர்கள வீட்டிலுள்ள நகை, பணம் ஆகியவற்றையும் களவாடியுள்ளனர். தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய இடம், 71/9, சீனியர் லேன், கலட்டி: யாழ்ப்பாணம். C 3332

## இவ்வாரம்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

### துலாம்

புத்திர சுகமுண்டு. எதிலும் வெற்றிக் கொடி நாட்ட முற்படுவீர்கள். கடமையிலும் நாட்டம் பிறக்கும். திடீர் வரவு வளமான பயணத்தை ஏற்படுத்தும். கல்வி பயில்வோருக்கும் கணிசமான தினம்.

### விருச்சிகம்

பொருளாதாரத் துறையில் வீழ்ச்சி தென்படும். பணம் பறி போவதற்குமிடமுண்டு. பிறரின் நச்சரிப்புக்கும் ஆளாகுவீர்கள். குடும்பப் பிணக்கும் பலமாகும். ஆணவப் போக்கும் பல இடர்களை ஏற்படுத்தும். அவதானத்துடன் நடக்கவும்.

### தனுசு

காதர்ல சுணை தொடுப்பர். வாழ்க்கையிலும் புதிய நம்பிக்கை உதயமாகும். தொழில் மேம்பாடு உண்டு. தொல்லை நிவர்த்திகளுமுண்டு. அற வழிநாட்டம் மனதிற்கு நிம்மதி தரும். தெய்வ சிந்தையும் தாராளமாகக் கிட்டும்.

### மகரம்

பகை மூட்டம் திரை போடும். பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். நண்பர்களின் தொடர்பு முடிவில் பிரிவில் வாட்டும். விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையலாம். முதலீடுகளைத் தவிர்க்கவும். தெய்வ வழிபாடு நன்று.

### கும்பம்

பிதாவழிப் பெருமை. ஆசி தாராளமாகக் கிடைக்கும். கனிவான நினைவுகள் தலைதூக்கும். கல்வியிலும் முன்னேற்றம் காணப்படும். ஆராய்ச்சியில் ஆனந்தமடைவீர். புதிய தொழில் முயற்சி நன்மை தரும். புதிய யாத்திரை ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

### மீனம்

நீண்ட நாள் கொடுக்கல் வாங்கள் இன்று நிவர்த்தியாகும். இலட்சிய வாதிகள் பயனடைவர் மனையிலும் மகிழ்ச்சி தென்படும். கடமையும் நிலைபெறும். தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றம் நன்மையைத் தேடித் தரும். சுபதினம்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**


**லிடோ**

காலை 10-30, 2-30, 6-30
M.G.R -லதா நம்பியார்-
தேங்காய் நடித்த
**நீதிக்குத்
தலை வணங்கு**
(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்**

10-30, 2-30. 4-30
6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill


## சட்டபபரீடசை

கொழும்பு, சனி
கொழும்பு பல்கலைக் கழக சட்டபீடப் பரீட்சைகள் ஆகஸ்ட் 4ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. [சிவ]


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony 2020 கலர் ரி-வி Goldstar 17'' B/W ரி-வி விற்பனைக்குண்டு தொடர்பு:- S கிருபாகரன், வசந்தவாசா, பத்தாவத்தை, இளவாலை. [C-3325]


## 45-ம் நாள் நினைவஞ்சலி



**வைத்திலிங்கம்
கேதீஸ்வரன்
(நடேஸ்)**

அன்னைமடியில்:
7-9-196?
ஆண்டவன் அடியில்:
23-5-1986

எங்கள் அன்புச்
செல்வமே
நாட்டைக்காக்க
எண்ணி
வீட்டை
மறந்தாயையா
வீரம் உன் நெஞ்சில்
—இன்று
பாரம் எம் நெஞ்சில்
எம்வீரமகனே-களாமல்
பிறந்து
இன்று—வாழாமல்
சென்றாயே வானுலகு
ஈழம் உள்ளவரை
அழியாதையா உன் புகழ்
மண் மீட்கப்புறப்பட்டு—
விண்நோக்கிச்
சென்றனையே
பாராளும் பாவியர்—
பண்புகெட்ட
துன்மதியர்
போராடச் சென்ற
உன்னை போராடச்
சத்திபற்று மாய்த்தனரே
உன்னுயிரை
தமிழீழ மண்ணிலே
கூலிப்படையினரின்
குண்டுக்கே இலக்காகிய்
மறைந்ததையா உன்
உடம்பு
பிறந்ததையா
புகழுடம்பு

6-7-86 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்னாரின் சபிண்டீகரணகிரியைகளில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எம் அன்புச் செல்வமே உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால்வாடும்:
அன்பு அப்பா,
அண்ணா, தம்பி,
தங்கை, உறவினர்கள,
நண்பர்கள்.

புங்குடுதீவு. [C 321]

## ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, சனி
இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமாக இந்த மாதம் 15-ம் திகதி கொழும்பில் நடக்கவிருக்கும் அரசியல் சட்சிகள் மாநாட்டில் தமிழர் விடுதலை கூட்டணி கலந்து கொள்ளும் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையரசின் யோசனைகள் தமிழர் பிரிவுகளுக்கு தெரிவிக்கப்பட்டு விட்டதை கூறுவதற்காக இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே: என். டிக்ஷிற் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவைச் சந்தித்த பொழுது இதனை அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகள் குறித்து தமிழர் பிரிவுகள் அனைத்தும் இர்தவார இறுதியில் புதுடில்லிக்கு அழைக்கப்படலாம் என்றும் திரு. ஜே என். டிக்ஷிற் தெரிவித்தார்.

## ஷெல் தாக்குதலுக்கு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ். கோட்டையிலிருந்து நேற்றுப் பிற்பகல் ஏவப்பட்ட 'ஷெல்' தாக்குதலுக்கு வண்ணப் பகுதியல் நின்ற ஒருவருக்கு காலில் காயமேற்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## நினைவஞ்சலி

நெஞ்சு
பொறுக்குதில்லையே,.



**செல்வன்
தியாகராசா
ஜெயசேகரன்
(பிரகாஷ்)**

அன்னையின் மடியில்
4-11-1960
தாயக மண்ணில்;
22-5 1986

வியாழன்
மாலை - எங்கள்
விடியலுக்கு
முன்னறிவிப்பின்றியே
அஸ்தமனம் நிகழ்ந்தது
எங்கள் குடும்பத்தின்
'ஜெயசேகரன்' என்ற
மூத்தசூரியன்
மரண மேகத்தின்
பின்னால் நிரந்தரமாகவே
மறைந்து கொண்டான்
மண்ணின் விடிவிற்காக
குலக்கதிர்
குவலயத்தையே
மறந்துவிட்டான்.
வாழ்க்கை ஒரு நாவல்
—சிலருக்கு
ஒரு சிறுகதை உனக்கு அது
ஒரு குறுங்கதை
நெஞ்சு
பொறுக்குதில்லையே
நீ எம் நெஞ்சில்
நிறைந்துவிட்டதனால்...

விடுதலையின் பேரால் அணைந்த ஜோதியின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

அன்னை, தந்தை,
சகோதரங்கள்,
உற்றார், உறவினர்,
(C3328) தோழர்கள்.

## 31- வது நாள் நினைவஞ்சலி



**கந்தையா
சண்முகநாதன்
(ஹரேகிருஷ்ணு)**

தோற்றம்: 13-8-1950
மறைவு: 7-6-1986

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டகிளிநொச்சி வாசியாகிய கிளிநொச்சி கந்தசாமி கோவிலடி ஹரே கிருஷ்ணு ஸ்தாபன உரிமையாளரான கந்தையா சண்முகநாதன் சென்ற 7-6 86 அன்றுகிளிநொச்சி சரடிப் போக்கு சந்திக்கருகாமையில் ஆயுதப்படையினரால் சுடப்பட்டு மரணமானார்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வதிவிடத்தில் எதிர்வரும் 7-7-86 திங்கட்கிழமை பகல் நடைபெறும் உறவினர்களையும் நண்பர்களையும் அவரது ஆத்ம சாந்திக்காக நடைபெறும். இவ்வைபவத்தில் பங்கு பற்றும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகளும்,
(C3327) சகோதரர்களும்

கிளிநொச்சியில்

## இருவருக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், ஞாயிறு
கிளிநொச்சிப் பகுதியில் தமது முகாம்களை இராணுவத்தினருக்குக் காட்டிக் கொடுக்கும் சமூகவிரோத செயல்களில இருவர் ஈடுபட்டிருந்ததால் அவர்களுக்கு நேற்று மரணதண்டனை வழங்கியதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

பாலசுப்பிரமணியம், மருதயினார் பிள்ளை ஆகிய இருவருக்குமே கிளிநொச்சி பஸ் டிப்போ சந்தியில் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. [மா]

## பி பி ஸி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட முறையில் மிகவும் அவதானமாகவும், அம் மகா நாட்டு விடயங்கள் தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையுடனும் இருந்துகொண்டேன்,

இந்நிலையில் பி பி.ஸி.யில் இலங்கை உயர் ஸ்தானிகர் வெளியிட்ட கருத்து குறித்து அவரிடம் மீண்டும் விளக்கம் கோரும்படி கேட்டுக்கொள் கிறேன்.

அவ்விளக்கத்தில் அவர் தாம் குறிப்பிட்டது தவறு என்று தெரிவித்தால், த. வி. கூ. விடமும் பிரிட்டிஷ் மக்களிடமும் உங்கள் தொலைக்காட்சி சேவையில் அவர் மன்னிப்புக்கோர வேண்டும்.

மாறாக தமது கருத்து சரியென அவர் குறிப்பிட்டால், நீங்கள் [பி பி. ஸி] நீண்டகாலமாக பின்பற்றிவரும நடுநிலையான போக்கின் அடிப்படையில் எனக்கு அல்லது எனது கட்சியின் யாராவது ஒரு சிரேஷ்ட உறுப்பினருக்கு உங்கள் தொலைக்காட்சியில் தோன்றி இலங்கை உயர் ஸ்தானிகரின் கருத்துத் தொடர்பாக எமது விளக்கத்தை வெளியிட அனுமதிக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை உயர்ஸ்தானிகரின பேட்டி பி பி.ஸி.யின் ஒரு காலை வேளை நிகழ்ச்சியின் (பி. பி ஸி 1) போது ஒளிபரப்பாகியிருந்தது. [கி]


## வாருங்கள்!
## வந்து
## சுவைத்துப் பாருங்கள்!!

நாம் வழங்கும் தேசிய உணவு வகைகள்:
பற்பல! அதில் சில!!

- ஒடியல் பிட்டு
- குரக்கன் இடியப்பம்
- குரக்கன் பிட்டு

இதுமட்டுமா!
ஞாயிறு தினமும் காலை 11-30 மணி முதல்
பற்பகல் 2-30மணி வரை

**குளிர்பானம் முதல்
சூடானபானம் வரை!**

மூக்கின்மேல் விரலைவைத்தும் நம்பமாட்டீர்கள்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

**யாழ் பீச் இன்ஸ்',**

139, கடற்கரைவீதி, (பழைய பூங்காவீதிச் சந்தி)
யாழ்நகர்,
(இயற்கையின் இன்பச் சோலை)
[A-771]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 6-7-86

'தலைமன்னார் கடற்படையினரின்

# அனுமதிக் கடிதத்தைக் காட்டியும் எம்மை நோக்கிச் சுட்டனர்

## தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இலங்கைக் கடற்படையினரின் அனுமதி பெற்ற பின்பே இலங்கைக் கடற் பிராந்தியத்தில் காணாமல் போன எம்மவர்களான 5 மீனவர்களையும் தேடிக் கொண்டு நாம் பத்துப் பேராம் வந்தோம். தலைமன்னாரிலுள்ள கடற்படையினரே எமக்கு அனுமதி கொடுத்தார்கள்.''

இவ்வாறு சூட்டுக்காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம் வேர்கோட் கிராமத்தைச் சேர்ந்த மீனவரான வி. கணபதி (24 வயது) தெரிவித்தார்.

ஒரு ஆண் குழந்தைக்கும் இரண்டு பெண் குழந்தைகளுக்கும் தந்தையான கணபதி 12 வயதுமுதல் மீன்பிடித் தொழிலைச் செய்து வருகிறார்.

இவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: இலங்கைக் கடற்படையினர் நாங்கள் 10 பேரும் வந்த இரண்டு படகுகளையும் சுற்றிவளைத்து பிடித்த பின்பு தம்மை இலங்கைக் கடற்படையினர் என அறிமுகம் செய்தனர். அச்சமயம் தலைமன்னார் கடற்படையினரிடம் பெற்ற அனுமதிக் கடிதத்தை வைத்திருந்த எம்முடன் வந்த ஒருவர் அதனை எடுத்துக் காட்டினார். ஆயினும் கடற்படையினர் எமமை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

'கடற்படையினர் சென்ற பின்பு சூட்டுக் காயங்களுக்கு உடுத்திருந்த சாரத்தில் துணி கிழித்து இரத்தம் பெருகா வண்ணம் நீரில் நனைத்துக் கட்டிக் கொண்டேன். உணவும், நீரும் இல்லாமலும், காயங்களின் வலியினாலும் மயக்கமடைந்துவிட்டேன்.

பின்பு இலங்கையில் உள்ள புங்குடுதீவில் என்னை இளைஞர்கள் காப்பாற்றியபின்பே மயக்கம் தெளிந்தேன். [ஐ]

## 8 பேர் பலி நால்வர் காயம்

கொழும்பு, சனி

மட்டக்களப்பில் எட்டு தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் மேலும் நான்குபேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நடந்த மேற்படி சம்பவத்தில் திருகோணமலையிலிருந்து படகு மூலம் இவர்கள் மட்டக்களப்பை நோக்கி வரும்போது வழியிலே பாதுகாப்புப்படையினர் தாக்கியதாக மேலும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

## விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்

கொழும்பு, சனி

தமிழ்மொழி மூலம் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், விவசாயம் கற்பிப்பதற்கு மாவட்ட ஆசிரியர்கள் சேவையின் கீழ் உதவிஆசிரியர்களாக விஞ்ஞானப்பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கானவிண்ணப்பங்கள் யூலை 22ம் திகதி வெளியானவர் ததமானியில் கோரப்பட்டுள்ளது. [சிவ]

## பிந்திய செய்தி இராணுவமுகாம் மீது தாக்குதல்

(அலுவலக நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம் மீது நேற்று நள்ளிரவு 12-15 மணியளவில் போராளிகள் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து சுமார் 37 மைல் தூரத்தில் இந்த இராணுவ முகாம் உள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து திருமலையிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் குண்டுவீச்சு விமானங்கள் இராணுவமுகாம் நோக்கிச் சென்றன. [மா]

பல்கலைக்கழக

## கலைப்பீடத்திற்கு மாணவர் தெரிவு குறைக்கப்படும்

கொழும்பு, சனி

பல்கலைக் கழகத்தின் கலைப் பீடத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதைக் குறைப்பதற்கான கூட்டிணைப்புத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

1988, 1989ம் கல்வியாண்டிற்கு 1756 மாணவர்கள் கலைத்துறைக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்,

வர்த்தக முகாமைத்துவ முட்பட எந்தவொரு துறையும் 600க்கு அதிகமான மாணவர்களைக் கொண்டிருக்காது

பொருளியல் பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்களின் தொகை 500க்கு உட்பட்டேயிருக்கும். [பி]

இலங்கைக் கடற்படையினரால்

## இந்திய மீனவர்கள் இன்னலுக்குள்ளாகிறார்கள்

புதுடில்லி, ஜூலை

இலங்கைக் கடற்படையினரால் ராமேஸ்வரம் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகிறார்கள் என்று இராமநாதபுரம் தொகுதியைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். வி. இராஜேஸ்வரன், இந்திய உள்த்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங்கிடம் முறையிட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டையடுத்து திரு, பூட்டாசிங் ராமேஸ்வரம் பகுதியை தாம் பார்வையிட உள்ளதாகவும் இவ் விடயம் குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். [பி]

## தார்ஸி வித்தாச்சிக்கு கலாநிதிப்பட்டம்

கொழும்பு, சனி

பிரபல சர்வதேசப் பத்திரிகையாளரும் ஒப்சர்வர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும், ''அவசர நிலைமை - 18' நூலின் மூலம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியவருமான திரு தார்ஸி வித்தாச்சிக்கு கொழும்பு பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளது.

எதிர்வரும் 11ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வைத்திய கலாநிதி ஆர். பி. அந்தனிஸின் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் திரு. வித்தாச்சிக்கு இப்பட்டம்வழங்கப்படும். (ஷ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126

## தமிழக----

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பேச்சாளர் திரு பாலகுமார் தெரிவித்தார்.

இந்த யோசனைகளின் சில அம்சங்களை தெளிவாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு புதுடில்லிக்கு செல்வதா வேண்டாமா என்பது பற்றி இச்சந்திப்பின் பின் முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார் (து)

## ஷெல் தாக்கி வீடு சேதம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வை இராணுவ முகாமிலிருந்து நேற்று நள்ளிரவு ஏவப்பட்ட ஷெல்களின் பயங்கர சத்தத்தால் மக்கள் பீதியடைந்தனர்.

கரையோரப் பகுதியில் ஏவப்பட்ட ஷெல்களினால் கொத்தியால் கடற்கரையோர வீடொன்று பலத்த சேதத்திற்குள்ளானது.

கரையோர மக்கள் பலர் இரவில் வீடுகளில் தங்குவதில்லையாதலால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

## பலாலி முகாம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு பக்கமாக டச்சு வீதிக்கும் கூட்டுறவு சங்க கடைக்கும் இடைப்பட்ட 75 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மீண்டும் குடியேறி விவசாயம் செய்ய உதவ வேண்டும். அவர்கள் பெரிதும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

''டச்சு வீதிக்கு வடக்கு பக்கமாக பீதிகாரணமாக விவசாயம் செய்ய முடியாதுள்ள 50 குடும்பங்களை சேர்ந்த மக்கள் மீண்டும் விவசாயம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்.

''கஷ்டமுறும் மீனவர்கள் தம் வாழ்க்கையை நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் 5 மைல் தூரத்துக்கு மீன்பிடிக்க அனுமதியளிக்க வேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை கேட்டறிந்த பிரிகேடியர் முதல் இரண்டு கோரிக்கைகள் குறித்து விசேஷ அனுமதிப்பத்திரம் பெற்று அவர்கள் குடியேறி விவசாயம் செய்யலாம் என்றும் இணக்கம் தெரிவித்தார். மூன்றாவது கோரிக்கையை மேலிடத்துடன் கதைத்து அடுத்த வாரம் பதில் அளிப்பதாக தெரிவித்தார்.

மேற்படி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தற்சமயம் விநியோகிக்கப்படுவதாகவும், அவை பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டபின் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா

## பஸ்நிலையம் நாளை திறக்கப்படும்

வவுனியா, ஞாயிறு

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ்நிலையம் நாளை திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இப் பஸ்நிலையம் 50 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் முன்னர் குறிப்பிட்ட திகதியில் திறந்து வைக்கப்படாமலிருந்தது மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவின் பேரில் நாளை இப்பஸ் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. [மா]

## மோதல்

மட்டக்களப்பு, சனி

போராளிகளின் ட்ரக் மீது ஹெலிகொப்டர் 'ஷெல்' தாக்குதல் நடத்திய போது போராளிகள் ஹெலிகொப்டரை நோக்கி எதிர்த்தாக்குதல் நடாத்தினர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் கொத்தியாமலை என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.


## மரண அறிவித்தல்

### திரு. வே. அகஸ்ரீன் அன்ட்றூ

(இளைப்பாறிய பிரதம லிகிதர், புத்தளம் கச்சேரி)
காலமாகிவிட்டார்.

இவர்காலஞ்சென்ற திருமதி திரேஸ் அன்ட்றூ அவர்களின் அன்புக்கணவரும், அ பாக்கியநாதர் (கனடா), அவர்களின் அன்புச்சகோதரரும் அருட்சகோதரி மேரி ரில்டா [கார்மேல் மடம் கொள்ளுப்பிட்டி], திரு யோ. அஞ்சலோ அன்ட்றூ [நில அளவையாளர்], திருமதி. ஜெயசீலியோசவ், திரு ஜேம்ஸ் அருளானந்தம்[கனடா] ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. அன்ரான் யோசவ் பொறியியலாளர்), திருமதி நிர்மலா, திருமதி ஜஸ்மின் (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜந்தி, சுகந்தி, சிறீன், றேஷன், டிலானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவர். அன்னாரின் பூதவுடல் 7-7-86 திங்கள் பி. ப. 4 மணியளவில் யாழ். பரிகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும் 16/2 1ம் ஒழுங்கை யோ. அ. அன்ட்றூ கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

C 3331

### ஆறுமுகம் சுப்பையா – சண்டிலிப்பாய்.

சண்டிலிப்பாய் மக்களால் அன்புடன் ''சுப்பையா பாட்டா''என்று அழைக்கப்படும் ஆறுமுகம், சுப்பையா அவர்கள் தமது 96 வது வயதில் 5-7-86 சனிக்கிழமை காலமானார். அன்னார் இளைப்பாறிய புகையிரத இலாகா சிறுப்பரும், காலஞ்சென்ற ஞானலட்சுமியின் அன்புக்கணவரும், காலம் சென்ற ஆ கணபதிப்பிள்ளை (C. C. S) காலம்சென்ற ஆ. முருகேசு (புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம்சென்ற புனிதவதி, பத்மாவதி, யோகவதி, வடிவேல் (Industrial Packaging Company C V. Bhatt) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம்சென்ற ஆ மகேசன் (சட்டத்தரணி) ச. சிங்கைநாதன் [Cheminesc] சி சிவபாதசுந்தரம் [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), வ இந்திராணி ஆகியோரின் மாமனாரும், காலம்சென்ற மாலினி, நரேந்திரநாத், குமுதினி, விஜேதினி, ரவீந்திரநாத், தெய்வேந்திரநாத், மேகலா, நிர்மலா, விஜேகரன், சியாம்மிளா, மிதிலா, முருகதாசன், சிவதாசன், மங்களா, கலைவாணி, திருக்குமரன் ஆகியோரின் பாட்டனும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-7-86 திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் ''ஞானகிரி'' சண்டிலிப்பாயில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும். சி. சிவபாதசுந்தாம்.
''ஞானகிரி'', சண்டிலிப்பாய். (C 3329)

### திரு. கு. வை. கந்தையா

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது நவாலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியில் வசிப்பவருமாகிய கு. வை. கந்தையா 5-7-86 ல் காலமாகிவிட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், சமுத்திரராசா (குவைத்), விக்கினேஸ்வரராசா (சவுதி), கேதீஸ்வரராசா, செல்வி யோகநாயகி, அருந்தவநாயகி, உதயநாயகி ஆகியோரின் அருமைத் தந்தையும், வை. முத்தையா அவர்களின் அருமைச் சகோதரரும், திருமதி ஆசைப்பிள்ளை நாகமணியின் அன்புச் சகோதரரும், திருமதி பத்மினி சமுத்திரராசாவின் மாமனும், சசிகலா, உதேசு ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 6-7-86 ஞாயிற்றுக்கிழமை இன்று] காலை 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்கு ஆரியம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

[C 3318]